Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை ரூபா 7.00


நமது

# ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்



மொறாயஸ் ஒளிச்சுடர்

பல்,மூக்குக் கண்ணாடியகம்



பல் கட்டுதல், மூக்குக் கண்ணாடி வழங்குதல்

[1962 முதல் 1995 வரை யாழ்.வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது.]

இல.546, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.


தொ.பே.: 021 222 7893



மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு :2036 மாசி – 01ஆம் நாள் ஹிஜ்ரி 1428 முஹர்ரம் 03 (13.02.2005) ஞாயிற்றுக்கிழமை இதழ்: 136


# சந்திரநேருவுக்கு மாமனிதர் விருது; தேசியத் தலைவரால் கௌரவிப்பு!





(கிளிநொச்சி)

படுகொலை செய்யப்பட்ட அரியநாயகம் சந்திரநேருவின் இனப்பற்றுக்கும், தேசப்பற்றுக்கும் மதிப்பளித்து - அவரது நற்பணியை கௌரவிக்கும் விதத்தில் - தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் - மாமனிதர் என்ற அதியுயர் தேசிய விருது வழங்கிக் கௌரவித்துள்ளார்.

இது தொடர்பாக தமிழீழத் தேசியத் தலைவரின் கையெழுத்துடன் விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலகத்தால் கையளிக்கப்பட்டிருக்கும் ஆவணத்தில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது -

தமிழ் மக்களின் விடிவையும், தமிழீழ மண்ணின் விடுதலையையும் தனது வாழ்வின் அதி உன்னத இலட்சியமாக மதித்து, அதன் உயரிய இலட்சியத்துக்காக அயராது உழைத்த உன்னத மனிதரை தமிழர் தேசம் இன்று இழந்துவிட்டது. தமிழ் மக்களது உரிமைக்காகவும், நீதிக்காகவும் ஓயாது ஒலித்த ஒரு பெரும் குரல் இன்று அடங்கிவிட்டது. பகைவனின் மிருகத் தனமான தாக்குதலுக்கு ஒரு தமிழினப் பற்றாளர் பலியாகி (12 ஆம் பக்கம் பார்க்க)

# கிழக்கு படுகொலைகளைக் கண்டித்து குடாநாட்டில் நேற்று பூரண ஹர்த்தால்!

## வழமை நிலை முற்றாக ஸ்தம்பிதம்


(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன் உள்ளிட்ட நான்கு போராளிகள் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேரு ஆகியோர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து நேற்று யாழ்.குடாநாட்டில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. இதனால் இயல்பு நிலை முற்றாகப் பாதிக்கப்பட்டிருந்தது.

குடாநாட்டில் அனைத்துப் பகுதிகளிலும் வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்ததுடன் நேற்றைய தினம் சனிக்கிழமை விடுமுறை நாளாக இருந்த போதிலும் அத்தியாவசிய சேவைகளை வழங்கும் அரச திணைக்களங்களும் இயங்கவில்லை. (12 ஆம் பக்கம் பார்க்க)

பொதுமக்களைச் சீண்டிய

## படையினரின் காவலரண்கள் தென்மராட்சியில் தீ வைப்பு!



## வழமை நிலை முற்றாக ஸ்தம்பிதம்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன் உள்ளிட்ட நான்கு போராளிகள் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேரு ஆகியோர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து நேற்று யாழ்.குடாநாட்டில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. இதனால் இயல்பு நிலை முற்றாகப் பாதிக்கப்பட்டிருந்தது.

குடாநாட்டில் அனைத்துப் பகுதிகளிலும் வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்ததுடன் நேற்றைய தினம் சனிக்கிழமை விடுமுறை நாளாக இருந்த போதிலும் அத்தியாவசிய சேவைகளை வழங்கும் அரச திணைக்களங்களும் இயங்கவில்லை. (12 ஆம் பக்கம் பார்க்க)

## நெருக்கடியான சூழ்நிலையையே படுகொலைகள் ஏற்படுத்தியுள்ளன

### அகாஷியிடம் தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு




(மட்டக்களப்பு)

சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதற்குப் பதிலாக மிக நெருக்கடியான சூழலை உருவாக்குவதற்கான நிலையை - கௌசல்யன் உள்ளிட்ட போராளிகளின் படுகொலைகள் தோற்றுவித்திருப்பதாக தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாஷியிடம் தெரிவித்தார்.

தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினரை ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாஷி மட்டக்களப்பில் நேற்று சந்தித்துப் பேச்சு நடத்தினார். நேற்றுக்காலை 11.30 மணியளவில் இந்தச்சந்திப்பு(12 ஆம் பக்கம் பார்க்க)

## படையினரின் காவலரண்கள் தென்மராட்சியில் தீ வைப்பு!



சிதைக்கப்பட்ட காவலரணில் படையினர்.

(தென்மராட்சி)

வெலிகந்தவில் போராளிகள் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து நேற்று நடத்தப்பட்ட ஹர்த்தாலின்போது - தென்மராட்சிப் பகுதியில் பொதுமக்களுக்கும் படையினருக்கும் இடையில் ஆங்காங்கே கைகலப்புக்கள் இடம்பெற்றதுடன் - இரண்டு இராணுவக் காவலரண்களும் தீயிட்டு எரிக்கப்பட்டன.

நேற்றுக்காலை மீசாலை - புத்தூர் சந்தி மற்றும் கைதடிப் பகுதிகளிலே பொதுமக்களுக்கும் படையினருக்கும் மற்றும் பொலிஸாருக்குமிடையில் முறுகல்நிலை ஏற்பட்டது.

மீசாலை, புத்தூர் சந்தி, இராணுவ முகாமருகே நேற்றுக் (12 ஆம் பக்கம் பார்க்க)

## அரசியற்துறை செயலகம் மீது மன்னாரில் கைக்குண்டு வீச்சு!

### ஒருவர்பலி - இருவர் காயம்

(மன்னார்)

மன்னார் - அரசியற்துறை சமாதான செயலகத்தின் மீது நேற்றிரவு நடத்தப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் அங்கு நின்ற பொதுமக்களில் ஒருவர் மரணமடைந்ததுடன் இருவர் படுகாயமடைந்தனர்.

மன்னார் அரசியற்துறை சமாதான செயலகத்தில் நேற்றிரவு 7.45 மணியளவில் பச்சை ஓட்டோவில் வந்த சிலர் கதவைத் தட்டி கைக்குண்டை வீசிவிட்டுத் தப்பிச் சென்றனர். சம்பவ இடத்தில் நின்ற பொதுமக்களான

(12 ஆம் பக்கம் பார்க்க)



நேற்றைய ஹர்த்தாலால் வெறிச்சோடிய யாழ்.நகரம்.


நேற்றைய ஹர்த்தாலால் வெறிச்சோடிய சாவகச்சேரி நகரம்.


போர்க்களமான மீசாலை!







கைதடிச் சந்தியில் சாம்பல் மேடான இராணுவக் காவலரண்.

# யுத்தநிறுத்த மீறலா என்று விசாரணை நடத்தப்படுகிறது!

## கண்காணிப்புக்குழு தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் மட்டு-அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன் உட்பட ஆறுபேர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் யுத்தநிறுத்த உடன்படிக்கையை மீறும்செயலா? என்பது பற்றித் தற்போது எந்தக் கருத்தும் கூற முடியாது என்று போர் நிறுத்த கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன் மற்றும் போராளிகள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாகத் தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

வன்னியிலிருந்து மட்டக்களப்புக்குச்சென்றுகொண்டிருந்த விடுதலைப் புலிகளின் மட்டு-அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் உட்பட ஆறுபேர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் குறித்து, இதுவரை எவரும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்யவில்லை.

எனினும், விடுதலைப் புலிகள் இந்தப் படுகொலை தொடர்பாக எமது கவனத்துக்கு கொண்டுவந்துள்ளனர். இந்தப் படுகொலையின் பின்னணியில் யார் இருக்கின்றார்கள் என்பது பற்றி இதுவரை முறைபபாடு செய்யப்படவில்லை. எனினும், இதுபற்றி நாம் விசாரணை செய்து வருகிறோம்.

இந்தப் படுகொலை தொடர்பாக ஆராய்ந்து பார்க்கவேண்டிய பொறுப்பு பொலிஸாருக்கு உண்டு.

எனினும் இந்தப் படுகொலைச் சம்பவம் தொடர்பாக நிலைமைகள் ஓரளவு வழமைக்குத் திரும்பி வருகிறது. அதிஷ்டவசமாக எல்லா நடவடிக்கைகளும் சுமுகமாக இடம் பெற்றுவருகின்றன.

இந்த மோசமான சம்பவத்துக்குப் பொறுப்பானவர்கள் யார் எனத் தெரியாமல், இறுதி முடிவுக்கு வரமுடியாது என அவர் மேலும் தெரிவித்தார்.

## அதிரடிப்படை அமைக்க ஆலோசனை வழங்குமாறு பங்களாதேஷ் கோரிக்கை

(கொழும்பு)

பொலிஸ் விசேட அதிரடிப்படை (எல்.ரி.எவ்) போன்றதொரு கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவதற்குப் பங்களாதேஷ் அரசாங்கம், இலங்கை அரசிடம் உதவி கோரியுள்ளதாகத் தெரியவருகிறது.

தமது நாட்டிலும் விசேட அதிரடிப்படை ஒன்றை உருவாக்குவதற்கான ஆலோசனைகளையும், ஒத்துழைப்பையும் வழங்கி உதவுமாறு, பங்களாதேஷ் அரசிடமிருந்து உத்தியோகபூர்வமாகக் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

இந்தக் கோரிக்கை குறித்த பதில் இலங்கை அரசாங்கத்தினால் உடனடியாக வழங்கப்படவில்லை எனவும் தெரியவருகிறது. (01)

# கௌசல்யன் படுகொலையை அரசாங்கம் கண்டிக்கிறதாம்!

## மங்கள சமரவீர தெரிவிப்பு

விடுதலைப் புலிகளின் மட்டு - அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் உட்பட ஆறுபேர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை அரசாங்கம் வன்மையாகக் கண்டிப்பதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில் -

இந்தச் சம்பவம் குறித்து அரசாங்கம் தமது ஆழ்ந்த கவலையைத் தெரிவிக்கிறது.

இவ்வாறான சம்பவங்கள் சமாதான நடவடிக்கைகளுக்கு பாரிய அச்சுறுத்தல்களை ஏற்படுத்தும்.

இதேவேளை சுனாமி அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களில் 75 வீதமானவர்களுக்கு அரசாங்கத்தின் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

சில பிரதேசங்களில் பாதிக்கப்பட்ட மக்கள் அனைவருக்கும் நிவாரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆயினும், அந்தப்பிரதேசங்களில் முறைகேடுகள் ஏற்பட்டுள்ளது. அவ்வாறானவர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார். (01)



# இயல்பு வாழ்வை பாதுகாக்கவே அவசரகாலச் சட்டம் அமுலாம்!

## ரட்ணசிறி விக்கிரமநாயக்க கூறுகிறார்

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தின் பின்னர் நாட்டின் பல பகுதிகளிலும் மக்களின் இயல்பு வாழ்க்கையைப் பாதுகாக்கும் நோக்கிலேயே அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்த வேண்டியேற்பட்டதாகப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்தார்.



நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் அவசரகாலச் சட்டத்தை நீடிப்பது தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

தொடர்ந்து அவர் உரையாற்றுகையில் -

இயற்கை அனர்த்தத்துடன் சொத்துக்கள் கொள்ளையடிக்கப்பட்டமை, சிறுவர் துஷ்பிரயோகம் ஆகிய சட்டவிரோத நடவடிக்கைகள் இடம்பெற்றன.

இதனைக் கட்டுப்படுத்துவதற்கும், மக்கள் சேவையை ஒழுங்கான முறையில் அமுல்படுத்தும் நோக்கிலேயே இந்த அவசரகாலச் சட்டம் அமுல்படுத்தப்பட்டது. இதனால் தற்போதைய நிலையை சீராகக் கொண்டு செல்வதற்கு பாதிக்கப்பட்ட பதினான்கு மாவட்டங்களில் அமுல்படுத்தப்பட்டுள்ள அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதற்கு ஆதரவு வழங்குமாறும் அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க வேண்டுகோள் விடுத்தார். (01)

## புகுமுக மாணவர்களுக்கான வழிகாட்டல் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட முதலாம் வருட புகுமுக மாணவர்களுக்கான வழிகாட்டல் நிகழ்வின் ஆரம்பவிழா, நாளை காலை 9 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் கலைப்பீடாதிபதி பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

புகுமுக மாணவர்களுக்குச் சிரேஷ்ட மாணவர்களால் எந்தப் பிரச்சினையும் ஏற்படாவண்ணம் பாதுகாப்பு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

புகுமுக மாணவர்கள் விரும்பினால் தமது பெற்றோருடன் இந்த ஆரம்பவிழா நிகழ்வுக்கு வந்து கலந்து கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது.



இலங்கை வந்துள்ள ஜப்பானிய விசேட தூதுவர் யசுஷி அகாஷி - ஜே.வி.பியின் சிரேஷ்ட தலைவர்களைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்திய போது எடுக்கப்பட்ட படம்.

# வீடமைப்புத் திட்டங்களுக்கென தனியாரிடம் காணிகள் கொள்வனவு

சுனாமியால் வீடுகளை இழந்த மட்டக்களப்பு மாவட்ட மக்களுக்கு, வீடுகளை அமைத்து கொடுப்பதற்கென மட்டக்களப்பில் தனியார் காணிகள் கொள்வனவு செய்யப்படும் எனவும், இங்கு அரசாங்கக் காணிகள் போதியளவு இல்லாத காரணத்தால், தனியார் காணிகளைக் கொள்வனவு செய்ய திட்டமிட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட வீடமைப்பு நிர் மாணிப்புக் குழுத் தலைவரும் அமைச்சருமான அத்தாவுட செனவிரத்ன தெரிவித்தார்.

இந்தப் பிரதேசத்தில் அரசாங்க காணிகள் எவ்வளவு உள்ளது என்பதைக் கணிப்பிட்ட பின்னரே எவ்வளவு காணிகளை தனியாரிடமிருந்து கொள்வனவு செய்ய வேண்டும் என்பதை தீர்மானிப்போம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் -

வீடுகளை இழந்தவர்களுக்குக் காணிப் பற்றாக்குறையான இடங்களில் வீடுகளை அமைக்கும் போது, மாடி வீடுகள் அமைத்து கொடுக்கப்படும்.

போதுமானளவு காணிகள் உள்ள இடத்தில் வீடுகள் அமைக்கும்போது, வீட்டுடன் 10 பேர்ச் காணியும் வழங்கப்படும். வாகரை, காத்தான்குடி, திராய்மடு ஆகிய மூன்று இடங்களில் அமைக்கப்படவுள்ள வீடமைப்பு திட்டங்களுக்கான அடிக்கல் எதிர்வரும் 20 ஆம் திகதி நாட்டப்படும் அதனை தொடர்ந்து ஏனைய இடங்களிலும் வீடமைப்பு திட்டங்கள் ஆரம்பிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## கௌசல்யனின் கொலையைக் கண்டித்த கொபி அனான்மீது ஹெல உறுமய சீற்றம்!

விடுதலைப்புலிகளின் மட்டு. அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை கண்டித்த ஐ.நா.செயலாளர் நாயகம் கொபி அனானை ஜாதிக ஹெல உறுமயவும் கண்டித்துள்ளது.

உத்தேச அவசரகாலச்சட்ட நகல் மீதான விவாதத்தில் உரையாற்றியபோதே ஹெல உறுமயவின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் அத்துரலிய ரத்ன தேரர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - ஜனாதிபதி மீதான தற்கொலைக் குண்டுத் தாக்குதல் சம்பவத்தின்போதும், ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் மீதான படுகொலைச் சம்பவங்களின்போதும் மௌனியாக இருந்த ஐ.நா. தற்போது விடுதலைப்புலிகளின் கொலைக்குக் கண்டனம் வெளியிடுவது கண்டனத் துக்குரியது.

ஐ.நா. இப்படியொரு கண்டன அறிக்கையை வெளியிடுமளவுக்கு அதனைப் பிழையாக வழிநடத்தியிருக்கும் இலங்கை வெளிவிவகார அமைச்சு மற்றும் ஐ.நா. அபிவிருத்தி திட்டத்தின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதிகள் ஆகியோரையும் கண்டிப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## ஹையேஸ் கடத்தியவர்கள் விளக்கமறியலில்

யாழ்.நகரப் பகுதியில் 15 லட்சம் பெறுமதியான ஹையேஸ் வாகனமொன்றைத் திருடியதாக, சந்தேகத்தின்பேரில் பொலிஸாரால் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்ட மூவர், யாழ்.நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டனர்.

கொழும்பிலிருந்து வாடகைக்கு அமர்த்தப்பட்டு, யாழ்.நகருக்கு வந்த ஹையேஸ் வானின் சாரதிக்கு மதுபானம் வாங்கிக்கொடுத்துவிட்டு, அவர் போதையில் மயங்க, வாகனத்தை அபகரித்துச் சென்றதாக யாழ்.குற்றத்தடுப்புப் பொலிஸ் பிரிவில் முறைப்பாடு செய்யப்பட்டது. இதனையடுத்து, சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்ட இந்த மூன்றுபேரையும் எதிர்வரும் 21 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நிதவான் உத்தரவிட்டுள்ளார்.

# ரவூப் ஹக்கீமை சந்தித்து யசூஷி அகாஷி பேச்சு!

(கொழும்பு)

இலஙகை வந்துள்ள ஜப்பானின் விசேட தூதுவர் யசுஷி அகாஷி நேற்றுமுன்தினம் காலை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு முஸ்லிம் மக்களுக்கு ஏற்பட்ட சேதங்கள் குறித்து, இந்தச் சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டதாக ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ரவூப் ஹக்கீமின் இல்லத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் -

இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் அகியோ சூடா, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் மற்றும் அவர்களின் தேவைகள் குறித்து தாம் அறிந்து கொண்டதாக யசுஷி அகாஷி தெரிவித்தார். (01)

# தளபதிகளான சொர்ணம், பால்ராஜ் வாகரை மக்களுடன் கலந்துரையாடல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாகரைப் பிரதேசத்தில் பொது மக்களுக்கும், விடுதலைப்புலிகளின் முக்கிய தளபதிகளுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று கதிரவெளியில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதில் திருகோணமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம், அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன், தளபதி கேணல் பால்ராஜ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தற்போதைய இலங்கை அரசியல்நிலை பற்றியும், தற்போதைய அரசியல் நடைமுறைகள் பற்றியும் இங்கு எடுத்துக் கூறப்பட்டதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளராக இருந்த கௌசல்யனின் கொலை தொடர்பாக, மக்கள் மத்தியில் ஏற்ப்பட்டிருந்த அச்ச உணர்வுகளைக்களையும் முகமாக இந்தச் சந்திப்பு ஏற்படுத்தப்பட்டிருந்தது.

# இங்கிலாந்துக்கு எதிரான தொடரை தென்னாபிரிக்க அணி கைப்பற்றியது!




(டர்பன்)

இங்கிலாந்து அணிக்கு எதிரான ஆறாவது ஒருநாள் போட்டி, மழையால் கைவிடப்பட்டதால் தென்னாபிரிக்க அணி தொடரைக் கைப்பற்றியது.

நேற்றுமுன்தினம் டர்பனில் நடைபெற்ற ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

தொடக்கவீரர் சிமித் 1 ஓட்டத்துடன் ஆட்டமிழக்க, அடுத்து களமிறங்கிய கலிஸும், அடுத்த பந்தில் ஆட்டமிழந்ததால் அணி நெருக்கடிக்குள்ளானது.


இதன்பின்னர் இணைந்துகொண்ட கிப்ஸ்– பச்சர் ஜோடி நிதானமாக ஆடத்தொடங்கியது. எனினும் ஸ்கோர் 53ஆக உயர பச்சர் 15 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

இதையடுத்து பிறின்ஸ் களமிறங்கி, கிப்ஸுக்கு தோள்கொடுத்தார்.

எனினும், ஸ்கோர் 114ஆக அதிகரிக்க, 27ஓட்டங்களைப் பெற்றிருந்த பிறின்ஸ் வீழ்த்தப்பட்டார்.

இதன்பின்னர் வந்த பௌச்சர் 24 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, அடுத்துக் களமிறங்கிய கெம்ப் மற்றும் பொலக் ஆகியோர், டக் அவுட்டாகி வெளியேறினர்.

அடுத்தடுத்து விக்கெட்டுக்களை இழந்த நிலையில் ஹோல் களமிறங்கி ஆடிக்கொண்டிருந்தபோது – அபாரமாக ஆடி அணிக்கு நம்பிக்கையூட்டிக்கொண்டிருந்த கிப்ஸ் ஆட்டமிழந்தார்.




133 பந்துகளில் 10 பவுண்டரிகள், 1 சிக்ஸருடன் இவர் 118 ஓட்டங்களைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. இதையடுத்து என்ரினி டக் அவுட்டாக, அடுத்து நெல் ஜோடி சேர்ந்த போதும், ஹோல் 10 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்துசெல்ல தென்னாபிரிக்க அணி 211 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.



பந்துவீச்சில் வாப்–3, கபீர் அலி –3, டரன் கோ–2,, கொலிங்வூட் மற்றும் கைல்ஸ் ஆகியோர் தலா 1 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இதையடுத்து சுலபமான வெற்றி இலக்குடன் இங்கிலாந்து அணி களமிறங்கியது.

ஆனால் 7 ஓட்டங்களை எடுப்பதற்குள் இரண்டு விக்கெட்டுக்களை அது இழந்தது.

ட்ரெஸ்கொதிக் 1, ஜோன்ஸ் 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தநிலையில், ஸ்கோர் 7ஆக இருந்தபோது மழை குறுக்கிட்டதால் ஆட்டம் கைவிடப்பட்டது.

இதனால் 7 போட்டிகளைக் கொண்ட தொடரை 3:1 என்ற அடிப்படையில் தென்னாபிரிக்கா கைப்பற்றியது. இறுதிப் போட்டி இன்று நடைபெறவுள்ளது.

## அகமதாபாத் விவகாரம் கிரிக்கெட் சபையின் முடிவுக்கு வெளியுறவு அமைச்சு ஆதரவு!

அகமதாபாத்தில் டெஸ்ட் போட்டியில் விளையாடுவதில்லையென பாகிஸ்தான் கிரிக்கெட் சபை எடுத்துள்ள முடிவை ஆதரிப்பதாக பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சு கூறியுள்ளது.

பாதுகாப்பு காரணங்களைக் காட்டி குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் விளையாட பாகிஸ்தான் மறுத்து வருகிறது.

இந்திய சுற்றுப்பயணத்தின்போது பாகிஸ்தான் வீரர்களின் பாதுகாப்பையே பிரதானமாகக் கருதவேண்டியிருப்பதால், இந்த விடயத்தில் கிரிக்கெட் சபையின் கருத்தை ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது என்று பாகிஸ்தான் வெளியுறவு அலுவலக அதிகாரி கூறினார்.

## கோப்பாய் கோட்ட மட்ட வலைப்பந்தாட்ட போட்டிகள்

கோப்பாய் கோட்டமட்ட வலைப்பந்தாட்ட போட்டியில் – நேற்று நடைபெறவிருந்த அரையிறுதி ஆட்டங்கள் இன்று பிற்பகல் 2 மணிக்கு ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.

15 வயதுப் பிரிவில் ஆவரங்கால் ந.இ.வித்தியாலத்தை எதிர்த்து கோப்பாய் ம.வித்தியாலயமும், கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியை எதிர்த்து அத்தியார் இந்துக் கல்லூரியும் மோதும்.

17 வயதுப் பிரிவில் சோமாஸ்கந்தா கல்லூரியை எதிர்த்து ஆவரங்கால் ந.இ. வித்தியாலயமும் –

19 வயதுப் பிரிவில் இடைக்காடு மகாவித்தியாலயத்தை எதிர்த்து கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியும், அத்தியார் இந்துக் கல்லூரியை எதிர்த்து புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியும் மோதவுள்ளன.

விளையாட்டு

## சிநேகபூர்வ கிரிக்கெட் ஆட்டத்தில் கனகரத்தினம் ம.ம.வி வென்றது!

கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணிக்கும் ஸ்கந்தவரோதயா கல்லூரி அணிக்கும் இடையில் நடைபெற்ற சிநேகபூர்வ கிரிக்கெட் ஆட்டத்தில் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணி வெற்றிபெற்றது.

ஸ்கந்தவரோதயா கல்லூரி மைதானத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற மட்டுப்படுத்தப்பட்ட 50 ஓவர் கொண்ட இந்த கிரிக்கெட் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயா கல்லூரி அணி 50ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 207 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இதில் கபிலன், திவாகரன் ஆகிய இருவரும் தலா 50 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர். பந்துவீச்சில் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணிவீரர் ரஜீவ்குமார், சியாம்சன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணி 42 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 208 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது. இதில் கஜதீபன் 84 ஓட்டங்களையும், ரஜீவ்குமார் 36 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். பந்துவீச்சில் ஸ்கந்தவரோதயா கல்லூரி வீரர் ஜெயகிருஷ்ணா 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

## தொடரைக் கைவிடாவிடின் டெல்கி, கான்பூர் மைதானங்களையும் சேதப்படுத்தப்போவதாக எச்சரிக்கை

(புதுடெல்கி)

பாகிஸ்தானுக்கு எதிரான கிரிக்கெட் தொடரைக் கைவிடவேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால் அடுத்து டெல்கி மற்றும் கான்பூர் மைதானங்களையும் சேதப்படுத்துவோம் என்று சிவசேனா எச்சரித்துள்ளது.

இது குறித்து அந்தக் கட்சியின் டெல்கிப் பிரிவுத் தலைவர் ஜெய் பகவான் கோயல் கூறியதாவது –

பாகிஸ்தான் சிறையில் உள்ள 182 இந்தியர்களை விடுதலை செய்யவேண்டும். ஜம்மு–காஷ்மீருக்கு தீவிரவாதிகளை அனுப்புவது, பல்வேறு வழக்குகளில் தொடர்புடையவர்களை பாதுகாப்பது போன்றவற்றை பாகிஸ்தான் நிறுத்தவேண்டும்.

இவற்றை ஏற்றுக்கொண்டால் மட்டுமே பாகிஸ்தான் அணி இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் செய்யலாம்.

அவ்வாறு இல்லாவிட்டால், மொஹாலி கிரிக்கெட் மைதானத்தைத் தொடர்ந்து டெல்கி ஃபெரோஷா கோட்லா மைதானத்தையும், கான்பூர் கிரீன்பார்க் மைதானத்தையும் சேதப்படுத்துவோம் என்றார் கோயல்.

இதேவேளை, பஞ்சாப் மாநிலத்தில் உள்ள மொஹாலி மைதானத்துக்கு எந்தச் சேதமும் இல்லையென்றும் சேதப்படுத்த முயன்றவர்களை மைதானத்தின் பாதுகாவலர் பிடித்துவிட்டதாகப் பஞ்சாப் கிரிக்கெட் சங்க நிர்வாகிகள் கூறியுள்ளனர்.

இந்தச் சம்பவத்தை அடுத்து அந்த மைதானத்தில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. போட்டியின்போதும், அதற்கு முன்பும் முழு அளவு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## ஹைதராபாத் ரெனிஸ் இறுதிச் சுற்றில் நுழைந்தார் இந்திய வீராங்கனை சானியா



ஹைதராபாத்தில் நடைபெற்றுவரும் உலக மகளிர் ரெனிஸ் போட்டியின் இறுதிச் சுற்றுக்குள் நுழைந்துள்ளார் இந்திய வீராங்கனை சானியா மிர்சா.

இறுதிப் போட்டியில் உக்ரைனின் அலையோனோ போன்டாரென்கோவுடன் சானியா மோதுவார்.

ஹைதராபாத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற பரபரப்பான அரையிறுதி ஆட்டத்தில் 6-4, 7-6 (7-4) என்ற நேர் செட் கணக்கில் ரஷ்ய வீராங்கனை மரியா கிரிலென்காவை சானியா தோற்கடித்தார்.

இத்தகைய போட்டியில் முதன்முதலாக இறுதிச் சுற்றுக்கு சானியா தகுதிபெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

அவுஸ்ரேலிய கிராண்ட்ஸ்லாம் ரெனிஸ் போட்டியில் மூன்றாவது சுற்றுக்கு முன்னேறிய இந்தியாவின் முதல் வீராங்கனை என்ற பெருமைக்குரிய 18 வயது ரெனிஸ் புயல் சானியாவின் ஆட்டம் சிறப்பாக அமைந்தது.

முதல் செட்டை 6-4 எனக் கைப்பற்றி இரண்டாவது செட்டில் 3-0 என சானியா முன்னிலையில் இருந்தபோது, ஆட்டம் எளிதாக முடிந்துவிடும் என்று தோன்றியது. இருப்பினும் அநேக தவறுகளை இழைத்தார் சானியா. இதனால் ஒரு கட்டத்தில் சானியா தோற்றுவிடுவாரோ என்ற நிலை ஏற்பட்டது.

இருப்பினும் அதன்பின் சானியா தனது ஆட்ட நுணுக்கத்தை மாற்றி, வெற்றிக் கனியைப் பறித்தார்.

மற்றைய அரையிறுதி ஆட்டத்தில் ஜேர்மனியின் அன்னா–லீனா குரோயென்ஃபெல்டு கடுமையான வலது முழுங்கால் வலி காரணமாக ஆட்டத்திலிருந்து விலகியதையடுத்து, போன்டாரென்கோவுக்கு இறுதி வாய்ப்பு இலகுவாகக் கிடைத்தது.

## இந்திய சுற்றுப் பயணத்தில் இன்சமாம் உல் ஹக்கே கப்டன்!




(கராச்சி)

இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவிருக்கும் பாகிஸ்தான் அணிக்கு இன்சமாம் மீண்டும் கப்டனாக இருப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பாகிஸ்தான் சமீபத்தில் அவுஸ்ரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டது. இந்த பயணத்தின்போது 3 டெஸ்ட் போட்டிகளிலும் தோற்ற பாகிஸ்தான் பின்னர் நடந்த முத்தரப்புக் கிரிக்கெட்டில் மானத்தைக் கொஞ்சம் காப்பாற்றிக்கொண்டது. இறுதி வாய்ப்பை எட்டிய பாகிஸ்தான் கடைசியில் அவுஸ்ரேலியாவிடம் மண் கவ்வியது.

இருந்தபோதிலும் இந்தியப் பயணத்தின் போது இன்சமாமுக்கு இன்னொரு வாய்ப்புக் கொடுக்க பாகிஸ்தான் முடிவு செய்திருக்கிறது. நேற்றுக்காலை பாகிஸ்தான் அணியின் கப்டன் இன்சமாம் உல் ஹக், சபைத் தலைவர் ஷஹாரியார் கானைச் சந்தித்தார். அப்போது அவுஸ்ரேலிய பயணத்தில் வீரர்கள் குறிப்பிடத்தக்க வகையில் ஆடியதற்கு ஷஹாரியார் கான் வாழ்த்துக்கள் தெரிவித்தார்.

இவர்கள் சந்திப்பின்போது – இந்தியப் பயணத்திலும் கப்டன் பதவியில் மாற்றமில்லை என்று ஷஹாரியார் கான் இன்சமாமிடம் கூறியதாக பாகிஸ்தான் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

இது தொடர்பாக கப்டன் இன்சமாம் கூறுகையில் – கப்டன் பதவி தொடர்பாக நான் அவரிடம் எதுவும் பேசவில்லை. ஆனால் எங்கள் பேச்சின் நடுவே அது தொடர்பாக விவாதிக்கப்பட்டது. அப்போது ஷஹாரியார் கான் என்னிடம் கப்டன் பதவி தொடர்பாக உறுதி கொடுத்தார் என்றார்.

# சர்வமத யாத்திரைக் குழுவினர் குடாநாட்டை வந்தடைந்தனர்




(யாழ்ப்பாணம்)

கொழும்பு விகாரமகாதேவி பூங்காவிலிருந்து கடந்த 5 ஆம் திகதி புறப்பட்ட சர்வமத யாத்திரைக் குழுவினர் நேற்றுமுன்தினம் இரவு யாழ்ப்பாணத்தை வந்தடைந்தனர்.

சுனாமி கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட தெனனிலங்கையின் பல பகுதிகளுக்கும் விஜயம் செய்த இவர்கள் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்தை வந்தடைந்தனர்.

மாதம்பே அஸஜி தேரர் தலைமையிலான 60 பேர்கொண்ட இந்தக் குழுவினர் - ஏ-9 வீதி வழியாகத் தமது யாத்திரையை மேற்கொண்டு குடாநாட்டுக்கு வந்தனர்.

40 ஆயிரத்துக்கும் அதிகமான உயிர்களைப் பலியெடுத்தும், ஒரு லட்சத்துக்கும் கூடுதலான வீடுகளை இல்லாதொழித்து, பல லட்சக்கணக்கானவர்களின் எதிர்காலத்தைச் சிதறடித்த சுனாமி கடற்கொந்தளிப்பு ஏற்பட்டு ஒரு மாதம் கடந்துவிட்டது.

இந்த அனர்த்தத்தில் பலியானவர்களின் உறவினர்களுக்கும், உடமைகளை இழந்து நிற்கும் மக்களுக்கும் அனுதாபங்களை தெரிவிப்பதும், உயிரிழந்தவர்களின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்தனை நடத்துவதுமே தமது யாத்திரையின் முக்கிய நோக்கமாகும் என அஸஜி தேரர் தெரிவித்தார்.

# மாநகரசபையின் மேற்பார்வையில் குளங்கள் புனரமைக்கப்படுகின்றன

நிவாரண, புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சால் நொராட் திட்டத்தின் கீழ் - யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட பதினைந்து குளங்களின் புனரமைப்பு பணிகள் யாழ். மாநகரசபையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தத் திட்டத்தின் கீழ் - நெடுங்குளம், பால்குளம், தேவரிகுளம், கற்குளம், பிரமணாகட்டுகுளம், வண்ணான்குளம், மறவன்குளம், புல்லுக்குளம், நாச்சிமார் கோவில் குளம், நீர்நொச்சிதாழ்வு குளம், உப்புக்குளம், மூண்டுகுளம், கன்னாதிட்டி குளம், ஆரியகுளம், நரியன்குளம் ஆகிய குளங்கள் புனரமைக்கப்பட்டு வருகிறது.

இதனைவிட இந்தத் திட்டத்தின் கீழ் - காக்கைதீவில் கூட்டெரு தயாரிக்கும் பரீட்சார்த்த ஆலை ஒன்றும், அதற்கான நிர்வாகக் கட்டடம் ஒன்றும் அமைக்கும் ஏற்பாடுகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவற்றுள் நிர்வாக அலகுக் கட்டடம் பூர்த்தியடையும் நிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வேரொண்டை கொல்களத்தை இடம்மாற்ற நடவடிக்கை

கரவெட்டி - வேரொண்டையில் அமைந்துள்ள கொல்களத்தை வேறு இடத்துக்கு மாற்றுவதற்கு, கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

மக்கள் குடியிருப்புக்களை அண்மித்த பகுதியில் இந்தக் கொல்களம் அமைந்துள்ளதால், அந்தப் பகுதியில் சுகாதார சீர்கேடுகள் ஏற்படுகின்றதெனவும், இதனால் குறிப்பிட்ட கொல்களத்தை வேறிடத்துக்கு மாற்றுமாறு பல அமைப்புக்கள் பிரதேச செயலரைக் கோரி வந்துள்ளன.

இந்த முறைப்பாடுகளைப் பரிசீலித்த பிரதேச செயலர் - கொல்களத்தை வேறு இடத்துக்கு இடமாற்றம் செய்வதற்கான முன்முயற்சிகளில் ஈடுபட்டுள்ளார்.

இந்தக் கொல்களம் சம்பந்தமாக மாற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு மக்களின் குறைகள் நிறைவு செய்யப்படுமென, பிரதேச செயலர் நம்பிக்கை தெரிவித்துள்ளார். (13)

# ஊழியர் நலன்புரிச் சங்க வருடாந்த பொதுக்கூட்டம்

தென்மராட்சிப் பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும், புதிய நிர்வாகசபைத் தெரிவும் - எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

புதிய பிரேரனைகள் சமர்ப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னபாக செயலாளரிடம் ஒப்படைக்க வேண்டுமெனக் கோரப்பட்டுள்ளது.

இந்த வருட ஆரம்பத்தில் நடைபெறவிருந்த இந்த நிகழ்வும், ஒன்றுகூடல் நிகழ்வும் - சுனாமி அனர்த்தம் காரணமாகப் பிற்போடப்பட்டு, தற்போது மிக எளிமையாக நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக கழகச் செயலாளர் தெரிவித்தார். (24)

# காணாமற்போனோர் குறித்த ஆட்கொணர்வு மனுக்கள் மேல் நீதிமன்றில் விசாரணை

1996 ஆம் ஆண்டு காலப்பகுதியில் யாழ். குடாநாட்டில் காணாமற்போனோர் தொடர்பான ஆட்கொணர்வு மனு மீதான விசாரணை -நேற்றுமுன்தினம் யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

லோகேஸ்வரன் சேரன் என்பவர் தொடர்பாக ஆட்கொணர்வுமனு மீதான விசாரணை நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்த மனுவில் எதிர் மனுதாரராக அரியாலை இராணுவ முகாமில் பணியாற்றிய கிருசாந்தி குமாரசாமி கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட லான்ஸ் கோப்ரல் ராஜபக்ஷ நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டார்.

இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நீதிபதி - மார்ச் மாதம் 4 ஆம் திகதிக்கு வழக்கை ஒத்திவைத்தார்.

இதேவேளை, மேல் நீதிமன்ற நீதிபதியால் மேலதிக விசாரணைக்காக யாழ். நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட்ட ஆட்கொணர்வு மனுக்களும், மேலதிக நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரம் தலைமையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

நாகமுத்து செல்வராசா, சுப்பிரமணியம் சுதாகரன், செல்லத்துரை நந்தகுமார், பூதத்தம்பி யதிஸ்குமார், பரமு சந்திரசேகரம் ஆகியோர் தொடர்பான ஆட்கொணர்வு மனுக்கள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, வழக்கின் எதிராளியான லான்ஸ் கோப்ரல் ராஜபக்ஷவும் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நீதிவான் இந்த வழக்குகளைத் துரிதமாக நடத்தவேண்டும். எனவே மார்ச் 30, 31 ஆம் திகதிக்கும் - ஏப்ரல் 1 ஆம் திகதிக்கும் ஒத்திவைத்தார்.

## ஊழியர்களின் விபரங்களை அனுப்பக் கோரிக்கை

யாழ்.மாவட்டத்திலுள்ள சகல உள்ளூராட்சி மன்றங்களின் ஊழியர்களின் விபரங்களை உடன் அனுப்பிவைக்குமாறு, பிரதேச நகரசபைகளையும் - பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் வீஇராசையா கேட்டுள்ளார்.

இதில் உத்தியோகத்தர் தரம், பதவி, சேவை, சம்பள அளவுத்திட்டம் (2003, 2004, 2005) உத்தியோகத்தர் விபரம் என்பனவும் அனுப்பிவைக்குமாறு கேட்டுள்ளார். (29)

## வலி. மேற்கு கிராம அலுவலர்களின் உள்ளக இடமாற்றத்துக்கு எதிர்ப்பு

(சங்கானை)

வலி.மேற்கு கிராம உத்தியோகதர்களுக்கு உள்ளக இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த உள்ளக இடமாற்றம் மார்ச் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வருவதாக பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்ராஸ் கிராம உத்தியோகத்தர்களுக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் இந்தப் பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் கிராம உத்தியோகத்தர்களுக்கு மட்டுமே இந்த உள்ளக இடமாற்றம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இதனை ஆட்சேபித்து அந்தந்தப் பிரிவுப் பொது மக்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவித்தனர். (48)

# சின்னஞ்சிறு செய்திகள்

## தங்கச்சங்கிலி கண்டெடுப்பு

வல்லிபுர ஆழ்வார் ஆலயப் பகுதியில் தங்கச் சங்கிலி ஒன்று கண்டெடுக்கப்பட்டு, ஆலயத்தின் கருமபீடத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தங்கச் சங்கிலியைத் தவறவிட்டவர்கள் உரிய ஆதாரம் காட்டி, கருமபீடத்தில் பெற்றுக் கொள்ளுமாறு ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.

மயிலங்காட்டைச் சேர்ந்த அருள்நாதன் என்பவரே தங்கச் சங்கிலியைக் கண்டெடுத்து ஒப்படைத்தவராவார்.

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(நெடுந்தீவு)

நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலய ஆரமபப்பிரிவு மாணவர்களது இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி - நாளை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

அதிபர் எஸ்.சத்தியவரதன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் - பிரதம விருந்தினராகத் தவக வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஜி.வி.இராதாகிருஷ்ணன் கலந்துகொள்ளவுள்ளார்.

அன்றைய தினம் இடைவேளை நிகழ்வுகளாக சிறார்களின் வினோத உடை மற்றும் உடற்பயிற்சிக் கண்காட்சி என்பன இடம்பெறவுள்ளன. (113)

## ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவுப் பிரதேச செயலக மாதாந்த அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் - எதிர்வரும் 17 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 11.30 மணிக்குச் செயலக மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

உதவி அரசாங்க அதிபர் மபற்றிக் டிறஞ்சன் தலைமையில் இடம்பெறும் இந்தக் கூட்டத்தில், நெடுந்தீவுப் பிரதேசத்தின் அபிவிருத்தித் திட்டங்கள், சேவைகள் தொடர்பாக ஆராயப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (113)

## ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயற்திட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் ஆங்கில மொழி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான பயிற்சிநெறி - பிரிட்டிஷ் கவுன்சில் மற்றும் யு.எஸ்.எயிட் அமைப்புக்களால் நடத்தப்படவுள்ளது.

இதன் ஆரம்ப வைபவம் எதிர்வரும் 18 ஆம் திகதி மாலை 6 மணிக்கு யாழ்ப்பாணம் - மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள பிள்ளையார் இன் விடுதியில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் யாழ். மேலதிக அரச அதிபர் சிவசுவாமியும் கலந்து கொள்கின்றார்.

## கிரிக்கெட் சுற்றுப்போட்டி

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டி - எதிர்வரும் 18 ஆம திகதி காலை 9 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது. (29)

## ஆரியகுளம் வீதி செப்பனிடும்பணி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - பலாலி வீதியில் ஆரியகுளம் சந்திக்கும் இலுப்பையடிச் சந்திக்கும் இடைப்பட்ட வீதியின் திருத்தப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்தத் திருத்தப் பணிகளுக்காக இரண்டு சந்திகளுக்கும் இடைப்பட்ட பகுதி போக்குவரத்துக்கு மூடப்பட்டு வேலைகள் நடைபெறுகின்றன.

நீண்டகாலமாக இந்த வீதி பாரிய குன்றும் குழியுமாகக் காணப்பட்டது. இதனால் இந்த வீதியூடாகப் பிரயாணம் செய்வோர் மற்றும் வாகனங்களில் பயணிப்போர் மிகுந்த சிரமத்தின் மத்தியிலேயே பயணிக்க வேண்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# காணித்தகராறு மோதலில் இரண்டு பெண்கள் காயம்

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் பகுதியில் காணி எல்லைப் பிரச்சினையால் ஏற்பட்ட கைகலப்பில் - இரு பெண்கள் காயமடைந்து, யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் தவசிகுளம் கொடிகாமத்தைச் சேர்ந்த இரத்தினசிங்கம் செல்வராணி, யோகேஸ்வரன் நாகேஸ்வரி ஆகிய இருவருமே காயங்களுடன் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்படடுள்ளனர்.

இந்தச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது -

தவசிகுளம் பகுதியில் உள்ள காணியின் எல்லைப் பிரச்சினையால் ஏற்பட்ட வாய்த்தகராறு - கைகலப்பாக மாறி, தடிகளால் அடிபட்டபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இவர்கள் இருவரும் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

# பட்டதாரி நியமனங்களுக்கு விரைவில் நேர்முகப் பரீட்சை

கல்வி அமைச்சின் கீழ் தெரிவு செய்யபட்ட பட்டதாரிகளுக்கு, அவர்களின் தகுதிகளுக்கேற்ப நிமனங்களை வழங்குவதற்காக, நேர்முகத் தேர்வுகளை நடத்துமாறு மாகாண கல்வி அமைச்சுக்கு - கல்வி அமைசசு பணித்துள்ளது.

இந்த நேர்முகத் தேர்வுக்கான விண்ணப்பங்கள் தற்போது ஊவா மாகாணத்தில் கோரப்பட்டுள்ளன. வடக்கு கிழக்குமாகாண கல்வி அமைச்சின் கீழ் தற்போது 1800 பட்டதாரிகள் பணியாற்றி வருகின்றனர்.

இந்தப் பட்டதாரிகள் கல்விகற்ற பாடத்துறை, அவர்களின் தகுதிகள் என்பவற்றைப் பரிசீலித்து, அவர்களின் தகுதிகளுக்கு ஏற்ப நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

இது தொடர்பாக நாளை கல்வி அமைச்சின் செயலாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்றும் நடைபெறவுள்ளது. இந்தச் சந்திப்பின் பின்னரே இறுதித் தீர்மானம் எடுக்கப்படவுள்ளது.

இதேவேளை ஆயிரம் ஆசிரியர் ஆட்சேர்ப்புக்காக நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் - இரண்டாம் கட்ட நேர்முகத் தேர்வுகள் 900 பேருக்கு நடைபெற்று வருகின்றன.

நேர்முகத் தேர்வுகள் முடிவடைந்து, தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர் விபரங்கள் கல்வி அமைச்சுக்கு அனுப்பப்பட்டு, கல்வி அமைச்சின் அனுமதி கிடைத்தவுடன், வடக்கு - கிழக்கில் ஆயிரம் பேருக்கு ஆசிரியர் நியமனம் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.




# ஆமைகளும் நத்தைகளும்

சர்வதேச கிரிக்கெட் ஆட்டங்களில் மிகவும் மெதுவாக ஓட்டம் சேர்த்தல் என்ற வகையில் பார்க்கும் போது ஆமைவேகச் சாதனை புரிந்தவர்களும் இருக்கத்தான் செய்கின்றார்கள். இந்த விடயத்தில் டெஸ்ட் கிரிக்கெட்டின் ஆரம்ப காலத்தில் இருந்து, அதாவது முதல் டெஸ்டில் இருந்து (1877-78) வீரர்கள் எதிர்கொண்ட பந்துகளின் எண்ணிக்கை என்ற புள்ளிவிபரங்கள் பேணப்படாமை ஒரு வசதியின்மையாக இருக்கிறது.


கவாஸ்கர்
மெல்லநட மெல்லநட

இந்த முக்கியமான தரவுகள் கடந்த நாற்பது வருடங்களாகவே பதிவு செய்யப்பட்டு வருகின்றன.

ஆரம்ப காலத்தை எடுத்துக் கொண்டால், இங்கிலாந்தின் இடது கை துடுப்பாட்ட வீரர் வில்லியம் ஸ்கொட்டன் முதல்தர கிரிக்கெட் ஆட் டம் ஒன்றில் முழு இனிங்சும் ஆடிப்பெற்ற ஓட்டங்கள் ஒன்பது மட்டுமே. 1958 - 59 அவுஸ்ரேலிய இங்கிலாந்துத் தொடரில் இங்கிலாந்தின் ட்ரெவர் பெய்லி ஒரு டெஸ்ட் ஆட்டத்தில் ஏறத்தாழ ஏழரை மணித்தியாலங்கள் (458 நிமிடம்) களத்தில் நின்று பெற்றுக்கொண்ட ஓட்டங்கள் அறுபத்தெட்டு மட்டுமே.

இதே ஆட்டத்தில் அவுஸ்ரேலியாவின் ஜிம் பேர்க் நான்கு மணித்தியாலங்கள் பத்து நிமிடங்கள் நின்று பெற்ற ஓட்டங்கள் 28 மட்டுமே.

டெஸ்ட் ஆட்டங்களில் ஆயிரம் ஓட்டங்களுக்கு மேல் எடுத்தவர்கள் என்ற வரையறைக்குள் அடங்கும் ஆமைகள் யார் யார் என்ற தரவு ஒன்றைப் பெறக் கூடியதாக இருக்கிறது.



மைக் பிரெயர்லி
ஆசுவாசம் தேவைதானா?

இங்கிலாந்தின் பொப் டெய்லர் (விக்கெட் காப்பாளர்) 70/ 80 களில் 4260 பந்துகளைச் சந்தித்து 1156 ஓட்டங்கள் மட்டும் பெற்றார். இவரே முதன்மைச் சாதனை வீரர். இவரின் சராசரி 100 பந்துகளுக்கு 27.14 ஓட்டங்கள் என்றமையும். இவரை அடுத்து இங்கிலாந்தின் முன்னாள் அணித்தலைவர் மைக் பிரெயர்லி 100 பந்துக்கும் பெற்றுக்கொண்ட ஓட்டச் சராசரி 29.80.

சிறிஸ் ரவரே இவரும் இங்கிலாந்தைச் சேர்ந்தவர். 100 பந்துகளுக்கும் பெற்றுக் கொண்ட ஓட்டங்கள் 30.60. அடுத்து முன்னாள் அவுஸ்ரேலிய அணித்தலைவர் பில் வூட் புல் 31.02 என்ற சராசரியுடனும், நியூஸிலாந்தின் புறூஸ் எட்கார் 32.07 என்ற சராசரியும் பெறுகிறார்கள். எனவே ரசிகர்களுக்கு வெறுப்பேற்றி அலுப்புக்கொடுத்த வீரர்கள் என்ற பெருமையை மேற்கொண்ட வர்கள் பெற்றுக்கொள்கிறார்கள். இதைவிட முன்னாள் இந்திய அணித்தலைவர் சுனில் கவாஸ்கரின் முதலாவது உலகக்கிண்ண ஆமையோட்டம், பாகிஸ்தானின் முத்தஸார் நஸாரின் மெதுவான சதம் என்ற விடயங்களும் உண்டு. இவை பற்றிச் சரியான ஆதாரங்கள் தெரிந்த ரசிகர்கள் விளையாட்டு அரங்குக்கு ஆதாரத்துடன் எழுதலாமே.

– நிர்மலன்

# எல்லாம் ரஷ்ய மயம்


மாரட் சபின் தொடக்கம் இதுதான்

உலகின் முதன்மை என்பதே பெரும் வேதனைதான். இதைத்தான் அவுஸ்ரேலிய ஓபன் (2005) ஆண்கள் ஒற்றையர் பட்டம் வென்ற ரஷ்யரான மாரட்சபின் கூறுகிறார் போலத் தெரிகிறது. இவர் பற்றிப் பேசுகையில் முதலில் ஞாபகத்துக்கு வருவது இவர் 2000 ஆம் ஆண்டில் பீட்சாம்பிராசை வென்று தலைதூக்கிக் கொண்ட U.S ஓபன்தான். ஆனால் அந்த வெற்றியைப் பெரியதொரு விடயமாக ஏற்றுக்கொள்ள மறுக்கிறார் அவர். அவரைப் பொறுத்தவரை அது ஒரு தற்செயல் நிகழ்ச்சி என்பதுபோலப் பேசுகிறார். ஆனால் அதன் பின் தன்னை நிரூபிக்க எடுத்த முயற்சிகள் தன் மீது ஏற்படுத்திய தாக்கங்கள் தன்மீதே தனக்கு நம்பிக்கையை இழக்கவைத்தன என்கிறார்.

2000 ஆம் ஆண்டு U.S வெற்றியானது முதன்மை வீரர்களைத் தோற்கடிக்கும் நம்பிக்கையைத் தனக்குத் தரவில்லை என்றும், தொடர்ந்த காலத்தில் 2002 மற்றும் 2004 அவுஸ்ரேலிய ஓபன் தோல்விகள் அதை உறுதிப்படுத்தவே தனது தன்னம்பிக்கை குறைவடைந்துபோனதும் உண்மை என்பவர், இதுதான் உண்மையான வெற்றி என்கிறார். அதாவது அரையிறுதி ஆட்டத்தில் றொஜர் பெடரரைத் தோற்கடித்ததும், முதன்மை என்பது ஓரளவில் உறுதியாயிற்று என்கிறார். அதோடு ஹெவிட்டின் தாயகத்தில் வைத்தே அவரைத் தோற்கடித்தது மிகப் பெரிய சாதனை என்கிறார்.

தனது குறைபாடு, தன்னம்பிக்கை இழத்தல்தான் என்பவர் தனது பயிற்றுனர் பீற்றர் லுண்ட்கிரென் அந்த இருளில் இருந்து தன்னை வெளியே கொண்டுவந்தவர் என்கிறார். இதில் ஒரு விடயம் என்னவென்றால் 2003 ஆம் ஆண்டில் றொஜர் பெடரர் விம்பிள்டன் கிண்ணம் வென்றபோது அவரது பயிற்றுனர் மாரட் சபினின் பயிற்றுனர்தான். ஒருவரின் இழப்பு இன்னொருவரின் இலாபம் என்று சொல்லலாமா.

சபினுக்கு பீற்றர் அழுத் திக்கூறிய வேத வாக்கியம் ஒன்றுண்டு. அதுதான் "உன்னை நீ நம்பு" என்பது.


ஷரபோவா
ரஷ்யாவின் செல்லம்

றெனிஸ் போட்டிகயிட்டுத் தோல்விகனை லின்ட்ஸே

இது ஒருபுறம் இருக்க அவுஸ்ரேலிய ஓபன் றெனிஸ் போட்டிகளில் அரை இறுதிப் போட்டியில் செரினா வில்லியம்ஸிடம் அரும்பொட்டில் தோற்றுப்போன மரியா ஷரபோவா இதோ மீண்டும் எழுந்துவிட்டார்.

ஜப்பானின் ரோக்கியோ நகரில் நடைபெற்ற PAN PACIFIC OPEN TENNIS சுற்றுப்போட்டியில் கிண்ணம் வென்றிருக்கிறார் மரியா ஷரபோவா. இவர் தோற்கடித்தது வேறு யாரையும் அல்ல. அவுஸ்ரேலிய ஓபனில் செரினாவுடன் போட்டி கண்ட அமெரிக்க வீராங்கனை லின்ட்ஸே டெவன் போர்ட்டைத்தான். மகளிர் வரிசையில் தரம் ஒன்றைக் கொண்டிருப்பவர் டெவன்போர்ட். ஆனால் பாவம் ஒரு வாரத்தில் இரண்டு தோல்விகளுக்கு முகம் கொடுக்க வேண்டியதாயிற்று.

ஆனால் 17 வயதான ஷரபோவா லேசுப்பட்டவர் அல்ல. ஒரு தோல்வியால் தளர்ந்து விடாமல் ரோக்கியோவில் முதன்மை பெற்றுவிட்டார். கடந்த விம்பிள்டன் போட்டிகளில் லின்ட்ஸே டெவன் போர்ட்டைத் தோற்கடித்த ஷரபோவா, அதன் பின் இரண்டாவது முறையாக யப்பானில் அவரைச் சந்தித்தார். அதையே வெற்றியாகவும் மாற்றிக்கொண்டார்.


டெவன் போர்ட் 1998, 2001, 2003, 2004 வருடங்கள் இந்தக் கிண்ணத்தை வென்றவர். ஆனால் ஐந்தாவது முறையும் வென்று சாதனை படைக்க மரியா ஷரபோவா இவரை அனுமதிக்கவில்லை.

இப்போதுள்ள கேள்வி இந்தப் போட்டிகளின்பின் உலகின் முதல்தர வீராங்கனை யார்? செரினாவா அல்லது ஷரபோவாவா? அடுத்த வினா இந்த வருடத்தின் இனி வரப்போகும் மூன்று GRAND SLAMS களிலும் ஷரபோவா என்னமாதிரியான பதில் அளிக்கப் போகிறார். இறுதியாக மாரட்சபின், ஷரபோவா இருவரும் ரஷ்யர்கள். ரஷ்யர்களின் முன்னோக்கிய பாய்ச்சல் இன்னும் வலுவுடன்கூடிக் காணப்படப்போகிறது என்பது தெரிகிறது.

- ஜோசப் கிருஷ்ணா.

# இவருக்கும் நெற்றிக்கண் உண்டு.

பாகிஸ்தான் கிரிக்கெட்டின் பிரச்சினைகள் பற்பல. அதில் ஒன்று சொஹெய்ப் அக்தர் எனும் சிறந்த வேகப் பந்துவீச்சாளன். இப்போது அக்தர் பாகிஸ்தான் கிரிக்கெட்டின் ஒரு துறையின் விருத்திக்கான தேவை, அதற்கான நடைமுறைகள் பற்றிப் பேசுகிறார்.


அக்தர்
அனுபவம் துன்பம்

பாகிஸ்தான் இருவகைக் கிரிக்கெட் ஆட்டங்களிலும் வெற்றிகள் பெற வேண்டுமாயின் தன்னைப் போன்ற GENUINE FAST BOWLERS பாகிஸ்தானில் உருவாக வேண்டும் என்று கூறுகிறார். 120 km 130 km வேகத்தில் பந்துவீசுதல் காணாது. தன்னைப்போல ஏறத்தாழ 160 km வேகத்தில் பந்து வீசுபவர்கள் தான் தேவை. உதாரணத்துக்கு உலகின் முதல்தர துடுப்பாட்ட வீரர்கள் ஏழுபேரைக் கொண்ட அவுஸ்ரேலிய அணியை வீழ்த்துவதாயின் சாதாரண வேகப்பந்து வீச்சாளர்களால் அது சாத்தியம் இல்லை என்பது அவரது கருத்து.

அவுஸ்ரேலியாவுக்கு எதிரான முதல் இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் அக்தர் பெற்ற விக்கெட்டுகள் பதினொன்று. ஆனாலும் தோல்வியைத் தவிர்க்க முடியவில்லை. அவரே அது பற்றிச் சொல்கிறார். அக்தரால் மட்டும் பாகிஸ்தான் அணியின் வெற்றிக்காக பந்து வீசிவிட முடியாது. மறுமுனையிலும் எனக்கு உதவக்கூடிய பந்து வீச்சாளர் இருக்கவேண்டும் என்பவர், மொகமட்சமி காயமடைந்தது அணிக்குத் துரதிஸ்டமாகவே போயிற்று என்கிறார்.

அக்தர் வேகப்பந்து வீச்சாளருக்கு அடிக்கடி ஏற்படும் காயங்கள் மற்றும் உபாதைகள் பற்றிப் பேசுகிறார். ICC ஒருநாள் போட்டிகளில் குறிப்பிட்டளவு குறைப்புச் செய்யவேண்டும். தொடர்ந்து இருவகைப்பட்ட கிரிக்கெட்டிலும் வேகப்பந்து வீச்சாளர்கள் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக்கொள்வதால், பெருத்த இழப்புக்களுக்கு உட்படுகிறார்கள். உதாரணமாகப் பார்த்தால் இங்கிலாந்தின் ஸ்ரீவ் ஹார்மிசன், அன்ரூ பிளின்ரொப், இந்தியாவின் ஷகீர்கான், ஆஷிஷ் நெஹ்ரா, நியூஸிலாந்தின் ஷேன் பொண்ட், டரல் டஃப்பி போன்றோருக்குத் தொடர்ச்சியான உபாதைகள் இருக்கின்றன. இதற்குக் காரணம் தொடர்ச்சியான பந்துவீச்சே என்பது இவரது கருத்து.

இன்னொன்றையும் அக்தர் சுட்டிக்காட்டுகிறார். அவுஸ்ரேலிய வெற்றிகளுக்கு உதவி புரியும் முக்கிய காரணகர்த்தாக்கள் வேகப்பந்து வீச்சாளர்களே என்பது அவரது கருத்து. கிளென் மக்ரா, ஜேசன் ஜிலெஸ்பி, மைக்கல் கஸ்பரோவிச் போன்றவர்கள் மிகச் சிறந்த வேகப்பந்து வீச்சாளர்கள். அவுஸ்ரேலியாவின் பன்னிரண்டாவது வீரரே மிகச்சிறந்த வேகப்பந்து வீச்சாளர். அவர் வேறுயாருமல்ல, பிரெட் லீ தான். இந்த வளம் கொண்ட அவுஸ்ரேலிய அணி வெற்றி பெறுவதில் என்ன ஆச்சரியம் இருக்க முடியும்? என்று கேட்கிறார் அக்தர். அக்தர் கூறுவதில் நிறையவே நியாயங்கள் உள்ளன என்பதையும் மறுக்கமுடியவில்லை.


– மக்டலின்

# பறக்கும் பந்துகள்.

ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் சிக்சர் அடிப்ப தில் பாகிஸ்தானின் சஹிட் அப்ரிடி சாதனை படைத்துள்ளார்.


முதல் பத்து சிக்சர் சாதனையாளர்களின் விபரம்:-

| பெயர் | இனிங்ஸ் | சிக்சர் |
|---|---|---|
| 1. சஹீட் அப்ரிடி (பாக் ) | 190 | 192 |
| 2. சனத் (இல) | 325 | 188 |
| 3. கங்கூலி (இந்தியா) | 258 | 168 |
| 4. கிறிஸ் கெய்ன்ஸ் (நியூ) | 180 | 144 |
| 5. சச்சின் (இந்தியா) | 333 | 142 |
| 6. இன்சமாம் (பாக்) | 311 | 142 |
| 7. விவியன் றிச்சட்ஸ் (மே.இ) | 167 | 126 |
| 8. வசீம் அக்ரம் (பாக்) | 280 | 121 |
| 9. அரவிந்த (இல) | 296 | 120 |
| 10. பிறைன் லாறா (மே.இ) | 244 | 110 |


அப்ரிடி
அதிரடிப்பட்டை

# துரதிஷ்டம் துரத்துகிறதா?

மூன்று பந்துகளில் ஒரு ஓட்டத்தைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் தென்னாபிரிக்க அணியின் லான்ஸ் குளுஸ்னர் பந்தை எதிர்கொள்கிறார். mid - on திசையில் பந்தைத் திருப்பிவிட்டு ஒரு ஓட்டத்தை எடுப்பதற்காக விரைந்து ஓடி வருகிறார். எதிர் முனையில் நின்ற அலன்டொனால்ட் பந்து செல்லும் திசையைப் பார்க்கிறாரே ஒழிய குளுஸ்னர் ஓடி வருவதை சற்றும் எதிர்பாராமல் சிலகணம் தடுமாறி பின் ஓடுவதற்குள், கில்கிறிஸ்ட் அவரை Run Out ஆக்க போட்டி Tie இல் முடிவடைகிறது.



அன்ட்ரூ ஹோல்
இன்று நான்

இது 1999 ஆம் ஆண்டு உலகக் கிண்ண அரைஇறுதி ஆட்டமொன்றின் பரபரப்பான இறுதித்தருணங்கள்.

I.C.C இந்த உலகக்கிண்ணப் போட்டிகளுக்கு முன்னர் ஒரு தீர்மானம் எடுத்திருந்தது. அதாவது அரையிறுதி ஆட்டங்களில் போட்டி சமநிலையில் முடிவடையும் சந்தர்ப்பத்தில், அவ்விரு அணிகளும் முன்னர் சந்தித்திருப்பின், அதில் வெற்றி பெற்ற அணி இறுதிப்போட்டிக்குத் தகுதி பெறும் என்பது தான். அதன்படி ஏற்கனவே Super six இல் அவுஸ்ரேலியா, தென்னாபிரிக்காவைத் தோற்கடித்ததனால் அவுஸ்ரேலியா இறுதிப்போட்டிக்குத் தகுதி பெற்றது.

இனிக் கூறப்போகும் சந்தர்ப்பமும் தென்னாபிரிக்க அணி வீரர்கள் பற்றியதே. குளுஸ்னர் நின்ற இடத்தில் இப்போது அன்ட்ரூ ஹோல். ஆனால் ஒரேயொரு பந்தில் ஒரேயொரு ஓட்டம் பெறவேண்டும். இங்கிலாந்து அணியின் கபீர் அலி பந்தை வீசுகிறார். அதை அப்படியே தூக்கி அடிப்பதற்காக கிறீசைவிட்டு வெளியே வருகிறார் ஹோல். அந்தோ பரிதாபம் பந்து துடுப்பில் படாமல் இங்கிலாந்து விக்கெட் காப்பாளர் ஜோன்ஸிடம் செல்ல மின்னல் வேகத்தில் Stumping செய்கிறார். போட்டி Tie இல் முடிகிறது.

இது தென்னாபிரிக்க - இங்கிலாந்து அணிகளுக்கிடையே புளும்பொன்டெய்னில் நடைபெற்ற 2 ஆவது ஒருநாள் போட்டியில் நடந்தது.

271 ஓட்டங்களை வெற்றி இலக்காகத் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி - வெற்றி பெறுவதற்கான வாய்ப்புக்கள் இருந்தபோதும், பின்வரிசை வீரர்களின் பொறுப்பற்ற துடுப்பாட்டத்தால் போட்டி Tie இல் முடிந்தது.

வழமையாக சுழற்பந்து வீசும்போதே Stumping செய்யப்படும். ஆனால் இந்தப் போட்டியில் மிதவேகப் பந்துவீச்சாளரான கபீர் அலியின் பந்துவீச்சில் ஹோல் Stumping செய்யப்பட்டது விசேட அம்சம்.



குளுஸ்னர்
அன்று நீ

கிரிக்கெட்டைப் பொறுத்து வேகப்பந்து வீச்சாளர்கள் பந்து வீசும் சந்தர்ப்பங்களில் விக்கெட் காப்பாளர் 15, 20 அடி தொலைவிலேயே நிற்பர். மாறாக சுழற்பந்துவீச்சாளர் பந்து வீசும்போது மட்டும் விக்கெட்டுக்கு அருகில் நிற்பர். விதி விலக்காக சில மிதவேகப் பந்து வீச்சாளர்கள் பந்துவீசும் போதும் விக்கெட் காப்பாளர்கள் அருகில் நிற்பதுண்டு. உதாரணத்துக்கு இந்தியாவின் முன்னாள் சகல துறை ஆட்டக்காரரான றொபின்சிங் மிதவேகப் பந்துவீசும் போது விக்கெட் காப்பாளர்கள் அருகிலேயே நிற்பர்.

ஒருசில நேரங்களில் இறுதி ஓவர்களில் துடுப்பெடுத்தாடுபவர்கள் - வேகப்பந்து வீச்சை எதிர்கொள்ளும் போது, bat இல் பந்து படாமல் விக்கெட் காப்பாளரிடம் செல்லும் போதும் விரைந்தோடி ஒரு ஓட்டம்பெறும் வாய்ப்பு நிகழ்வதுண்டு. அவ்வாறு நிகழ்ந்து விடுமோ என்றொரு சந்தேகத்தில் இறுதி ஓவரில் விக்கெட்டுக்கு அருகிலேயே நின்று கொண்டார் ஜோன்ஸ். அவரது நம்பிக்கை வீண்போக வில்லை.

இறுதி ஓவரில் 8 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற நிலையில் இந்தப் போட்டிக்குத் தலைமை தாங்கிய ட்ரெஸ்கொதிக் - வூஸ்டர் ஷயர் கவுண்ரி வீரர் கபீர் அலியிடம் பந்தைக் கொடுக்கிறார். மூன்று சர்வதேச ஒருநாள் போட்டி அனுபவம் மாத்திரம் கொண்ட அவர், சிறப்பாகப் பந்து வீசி 7 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து அணியைத் தோல்வியில் இருந்து காப்பாற்றினார்.

இங்கிலாந்திடம் டெஸ்ட் தொடரை இழந்ததையும், அண்மைக் காலமாக தென்னாபிரிக்க அணிக்கு ஏற்பட்ட சரிவையும் பார்க்கும் பொழுது - எப்படி இருந்த அணி இப்படி ஆயிட்டுதே என்றுதான் சொல்லத்தோணுகிறது.

– விமலன்.

# மனமெல்லாம் கவலை



ஜோன் புக்கானன்
ஓதற்கரியவன்

அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணியின் பயிற்றுனர் ஜோன் புக்கானன் அவ்வளவு சந்தோஷமாக இல்லை. ஏனெனில் தற்போதைய 50 ஓவர் ஒருநாள் போட்டிகள் (பாரம்பரிய ஒருநாள் போட்டிகள் என்பது இவரது வார்த்தைப் பிரயோகம்) சிறிது BORE அடிக்கிறது என்பது இவரது கருத்து.

முன்னர் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் வேகப்பந்து வீச்சாளர் மைக்கல் ஹோல்டிங் TWENTY20 கிரிக்கெட் ஆட்டம் உதவாத ஒரு விளையாட்டு என்று கூட்டித் தள்ளுவது போலச் சொல்லவில்லையென்றாலும், இவருக்கு TWENTY20 ஆட்டத்தின் மீது ஒரு பரிவு உண்டு போலத் தெரிகிறது.

நான் 50 ஓவர்கள் ஒரு நாள் ஆட்டங்களுக்கு மாற்றாக இதனை எண்ணவில்லை. என்றாலும் இங்கிலாந்தில் வேகமாகப் பரவும் இந்த விளையாட்டுப் பாணி அவுஸ்ரேலியாவிலும் கவனத்தைப் பெற்றுள்ளதைக் குறிப்பிடுகிறார்.

இவரது கவலைக்குக்காரணம் மேற்சொன்ன விடயம் மட்டுமல்ல - இன்னொன்றும் உண்டு. அவுஸ்ரேலிய அணி ஒருநாள் துடுப்பாட்டத்தில் ஆதிக்கம் செலுத்தி ஓட்டங்களைக் குவிக்க தொடர்ந்து களத்தடுப்பு மற் றும் பந்து வீச்சில் ஜமாய்த்து சர்வாதிகாரம் செய்து கொண் டிருந்தோம். ஆனால் இப்போது துடுப்பாட டத்தில் சிறிது கவனம் செலுத்த வேண்டிய நிலை உருவாகி உள்ளது என்பதே இவரது பெரிய கவலையாக இருக்கிறது.

இதற்கான காரணம் சிலவேளை மத்தியூ ஹைடனின் துடுப்பாட்டத் தளர்வாகக் கூட இருக்கலாம். தற்போது எதிர்கொள்ளப்போகும் நியூசிலாந்துடனான மூன்று டெஸ்ட் போட்டிகள் மற்றும் ஐந்து ஒரு நாள் போட்டிக்கான அணித் தெரிவு நடைபெறப் போகி றது. இந்தத் தெரிவு ஓரளவில் வருட இறுதியின் ASHES தொடர் மற்றும் உலகக் கிண்ண அணியை மனதிற் கொண்டதாகவும் அமையும்.



மத்தியூ ஹைடன்
எழுவது எப்போது?

இந்த நிலையைக் கருத்திற்கொண்டு தானோ என்னவோ இருபது வீரர்கள் கொண்ட இறுதி அணியொன்றைத் தெரிவு செய்து கொள்வது நல்லது. இதன் மூலம் பல தேவைகளையும் பூர்த்தி செய்து கொள்ளமுடியும் என்கிறார். தற்போது 35 வயதாகும் டரன் லீமன் அணியில் சேர்த்துக் கொள்ளப்படுவாரா என்பதற்கோ, தற்போது சரிந்துபோயுள்ள மத்தியூ ஹைடன் நியூசிலாந்து செல்வாரா என்பது பற்றிக் கேட்டால் நேரடியாகப் பதிலளிக்க அவர் விரும்புவதாகத் தெரியவில்லை. இருந் தாலும்ஹைடன் பற்றிப் பின்வருமாறு கருத்துக் கொண்டிருக்கிறார். அடிப்படையில் அவரது நிலையில் தளம்பல் இல்லை. ஆனால் உளவியல் ரீதியில் தன்னைப் பலப்படுத்திக் கொள்ளவேண்டிய தேவை இருக்கிறது என்று கூறுகிறார். ஒரு ஆட்டத்தில் அவர் சோபித்தால் காணும் பின்னர் எவ்வித பிரச்சினையும் ஹைடனுக்கு இராது என்கிறார்.

அவுஸ்ரேலியா VB தொடரில் பாகிஸ்தானை 2-0 என்று தோற்கடித்ததுடன் பதினாறு வருட காலத்தில் பதின்மூன்று முத்தரப்பு ஒரு நாள் கிரிக்கெட் கிண்ணங்கள் வரை கையகப்படுத்தியுள்ளது. இருந்தாலும் அணியின் ஒருசில வீரர்கள் சிறிது தளம்பியவுடன் புக்கானன் கப்பலே கவிழ்ந்தது போலத் துடித்துப் போகிறாரே. இவர் தானோ பயிற்றுநர் என்ற சொற்பதத்துக்கு இலக்கணம்?

– செந்தூரன்

# இளமைக்கென்ன வயசு



முன்னாள் அவுஸ்ரேலிய வேகப் பந்து வீச்சாளர் ஜெப்தொம்சன் இன்றைய முதல்தர வேகப்பந்து வீச்சாளர் கிளென் மக்ராவை ஆச்சரியத்துடன் பார்க்கின்றார். அதோடு மக்ராவையும் 2007 உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளையும் இணைத்துப் பார்க்கின்றார். இதற்குக் காரணம் உண்டு. மக்ரா 35 வயதைத் தாண்டியிருக்கிறார் என்பதே அது.

அவுஸ்ரேலிய வேகப்பந்து வீச்சாளர்கள் வரிசையில் முப்பத்தைந்து வயதைத் தாண்டியும் வேகப்பந்து வீச்சாளராக அவுஸ்ரேலிய அணியில் இருந்தவர்கள் நான்குபேர் மட்டுமே என்று கூறப்படுகின்றது. முன்னதாக றே லின்ட்வோல், கீத்மிலர் ஆகியோர் இந்தப் பிரிவுக்குள் வந்தவர்கள். 228 விக்கெட்டுக்களைச் சாய்த்த லின்ட்வோல் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வுபெறும் போது அவருக்கு வயது 38. இதேபோல் கீத் மிலர் 170 விக்கெட்டுக்கள் வீழ்த்தியவர். ஏறத்தாழ 3000 ஓட்டங்கள் பெற்றவர். இவர் ஒதுங்கிக்கொண்டபோது வயது 37. அதேபோல தொம்சன் தனது முப்பத்தைந்துகளில் இனிக் காணும் என்று எண்ணி கிரிக்கெட் உலகில் இருந்து ஒதுங்கிக்கொண்டார்.

ஆனால் மக்ரா 35 வயதிலும் நியூஸிலாந்துத் தொடருக்கு ஆயத்தமாகிறார். 2007 உல கக் கிண்ணப் போட்டிக்கு தானும் ஒரு வேகப் பந்து வீச்சாளனாகச் செல்வேன் என்று நம்பிக்கையும் கொண்டுள்ளார். இருந்தாலும் வயதின் ஏற்றம், உடல் தளர்ச்சி மற்றும் உபாதைகளுக்குக் களமாக இருக்கும். இதனை எப்படி மக்ரா சமாளிப்பார் என்பதே ஜெப் தொம்ஸனின் கேள்வியாக இருக்கிறது. மக்ரா 37 வயதாகும் போதும் இதே நலத்துடன் இருப்பார். ஒரு சுவையான விடயம் இருக்கிறது. மக்ரா 2007 ஆம் ஆண்டுவரை விளையாடி ஓய்வு பெற்றாலும், 38 வயது வரை விளையாடி ஓய்வு பெற்ற சாதனை டெஸ்ட் விக்கெட்டுகள் 519 பெற்ற ஹொட்னி வோல்சை விட இளையவராகவே இருப்பார்.

–அன்ரனீ

விளையாட்டு அரங்கம்

EXPOAIR
your friend in the skies...
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...
தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com




# இலவச படகு, இயந்திரம் திருத்தும் நிலையம் சிலாவத்தையில் அமைப்பு

சுனாமி அனர்த்தத்தால் முற்றாகப் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மனவர்களுக்கு நம்பிக்கையூட்டி, அவர்களை மீண்டும் தம் வழமையான வாழ்க்கைக்குச் செல்ல உதவும் வகையில், லண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலயம் - 25 ஆயிரம் பவுண்ஸ் செலவில் தமிழ் தகவல் தொழில்நுட்ப ஒருங்கமைப்பின் தொழில்நுட்ப மற்றும் முகாமைத்துவ உதவியுடன் சிலாவத்தை முல்லைத் தீவில் இலவச படகு மற்றும் இயந்திர திருத்தும் நிலையத்தை அமைத்துக் கொடுத்துள்ளது.

இதில் முதற்கட்டமாக திருத்தப் பட்ட படகுகள் மற்றும் இயந்திரங்கள், கடந்த 7 ஆம் திகதி மீனவர்களுக்கு வழங்கப்பட்டன.

மீனவர்களின் தேவையை அறிந்து இந்தச் சேவையை முல்லைத்தீவு மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் ஒருங்கிணைத்தது.

இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் முகுந்தன், கடற்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் ரங்கன், முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் மரியதாஸ், தமிழர் புனர்வாழ்வுக் கழக முல்லைத்தீவு மாவட்டப் பொறுப்பாளர் மூர்த்தி, லண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலய நம்பிக்கை நிதிய உப தலைவர் எஸ்.நவரட்ணம், தமிழ் தகவல் தொழில்நுட்ப ஒருங்கமைப்பு திட்ட இணைப்பாளர் நவஜீவன் ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.




# வவுனியாவிலும் நேற்று ஆர்ப்பாட்டப் பேரணி

கிழக்கில் இடம்பெற்ற படுகொலையைக் கண்டித்தும், சுனாமி அனர்த்தத்தால் வழங்கப்பட்ட நிவாரணம் நியாயமாக வழங்கப்படாமையைக் கண்டித்தும் சமாதானப் பேச்சுவார்த்தையை உடனடியாக ஆரம்பிக்கக் கோரியும் வவுனியாவில் நேற்று ஆர்ப்பாட்டப் பேரணி இடம்பெற்றது.

இந்தப் போரணி மும்முனைகளிலிருந்தும் ஆரம்பமானது, வவுனியா தமிழ் மகா வித்தியாலயத்திலிருந்து ஆரம்பமான பேரணிக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களான வினோநோகராதலிங்கம், சிவசக்தி ஆனந்தன், சிவநாதன் கிசோர் ஆகியோர் தலைமை தாங்கினர்.

பூந்தோட்டம் சந்தியிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட பேரணி - நாடாளுமன்ற உறுப்பினர் சதாசிவம் கனகரதினம் தலைமையிலும், குருமன் காட்டுச் சந்தியிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட பேரணி - நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தலைமையிலும் இடம்பெற்றது.

இந்தப் பேரணி வவுனியா மாவட்ட செயலகததை வந்தடைந்து, வெகுஜன அமைபுக்களின் தலைவர் சதாசிவம் குலதேவராசா - வவுனியா அரச அதிபாடமும், வவுனியா போர் நிறுத்த கண்காணிப்புக் குழு பிரதிநிதிகளிடமுமே மகஜர்கள் கையளிககப்பட்டன.

இதனைத் தொடர்ந்து வவுனியா வைரபுளியங்குளம் சிறுவர் பூங்காவில் அஞ்சலி கூட்டம் இடம்பெற்றது.

இந்தக்கூட்டம் தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர் ஜெயச்சந்திரன் தலைமையில் இடம்பெற்றது. (03)

## இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

### பெப்ரவரி 13

1689 : இங்கிலாந்து வரலாற்றில் - ஒரே சமயத்தில் இரு மன்னர்கள் இருப்பதாக அறிவிக்கப்பட்டது. மூன்றாம் வில்லியமும், அவரது மனைவி மேரியும் கூட்டாக இங்கிலாந்தின் மன்னர்களாக இருப்பர் என்ற அறிவிப்பே அது.

1692 : "ஸ்கொட்லாந்தின் சாபம்" என்று கருதப்படும் "கிளன்கோ படுகொலை" நடைபெற்றது.

1920 : போர்க் குற்றவாளிகள் அவர்களது சொந்த நாட்டிலேயே விசாரிக்கப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும் என்ற ஜேர்மனியின் வேண்டுகோளை நேசநாடுகள் ஏற்றுக் கொண்டன.

1939 : அமிலத்தன்மை, காரத்தன்மையைக் கண்டறிய பி.எச்.முறையை அறிமுகப்படுத்திய விஞ்ஞானி ஸோரன் பீற்றர் லாறிட்ஸ் ஸொரென்சன் காலமானார்.

1945 : இரண்டாம் உலக யுத்தத்தின் போது புடா பெஸ்ட் நகரத்தைக் காத்து நின்ற ஜேர்மனியின் 100,000 இற்கு மேற்பட்ட வீரர்களைக் கொண்ட படையணி சரணடைந்தது.

1950 : சதாவதானி செய்குத் தம்பிப் பாவலர் நினைவுநாள்.

1960 : அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன் ஆகிய மூன்று அணு வல்லரசுகளுடன் நான்காவது அணு வல்லரசாக இணைந்து கொண்ட பிரான்ஸ் தனது முதலாவது அணுகுண்டுச் சோதனையை சஹாரா பாலைவனத்தில் நடத்தியது.

1976 : நைஜீரியாவில் நடந்த புரட்சியின் போது ஜனாதிபதி ஜெனரல் முர்த்தாலா ரமத் முகம்மது கொலை செய்யப்பட்டார்.

1979 : அமெரிக்காவில் ஐ.பி.எம் நிறுவனத்தினரால் தொலைதூரத்திலுள்ள இரு கணினிகளிடையே தகவல் பரிமாற்றம் செய்து கொள்ள டெலி டெக்ஸ்ட் முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

1985 : கொக்கிளாய் இராணுவ முகாம் மீதான தாக்குதல் நடைபெற்றது.

1987 : போர்த்துக்கல் ஆதிக்கத்திலிருந்த மார்க்கோ என்ற இடத்தை 1999 ஆம் ஆண்டு சீனாவுக்கு விட்டுக் கொடுக்க, சீனாவும் போர்த்துக்கல்லும் உடன்பட்டன.

தொகுப்பு - சந்துரு

# கண்டாவளையில் மீளக்குடியேறியோரின் உலருணவு நிவாரணம் நிறுத்தப்பட்டது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்துள்ள மக்களுக்கான உலருணவு நிவாரணம் - முற்றாக நிறுத்தப்பட்டுள்ளதாக, அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர்.

கண்டாவளைப் பிரதேசத்துக்குட்பட்ட முரசுமோட்டை கிராமத்தைச் சேர்ந்த 120 குடும்பங்களுக்கும், ஊரியான் கிராமத்தைச் சேர்ந்த 93 குடும்பங்களுக்கும், கோரக்கன்கட்டு கிராமத்தைச் சேர்ந்த 96 குடும்பங்களுக்கும், பரந்தனைச் சேர்ந்த 141 குடும்பங்களுக்கும், குமரபுரத்தைச் சேர்ந்த 134 குடும்பங்களுக்கும், உமையாள்புரத்தைச் சேர்ந்த 71 குடும்பங்களுக்கும் இவ்வாறு இந்த நிவாரணம் நிறுத்தப்பட்டுள்ளது.

கடந்த செப்ரெம்பர் மாதத்திலிருந்து நிவாரணம் தமக்கு வழங்கப்படவில்லை எனவும், இதனால் தாம் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குவதாகவும் இந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

## முல்லைத்தீவு மாவட்டத்தில்

# கரைத்துறைப்பற்று பிரதேச செயலக பிரிவு சுனாமியால் பெரும் அழிவை சந்தித்தது

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கரைத்துறைப்பற்று உதவி அரசாங்க அதிபர் பிரிவிலேயே சுனாமி அனர்த்தம் பெரும் அழிவை ஏற்படுத்தியுள்ளது.

முல்லைத்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 18 கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த, 38 கிராமங்கள் பாரிய அழிவுகளைச் சந்தித்துள்ளன.

5 ஆயிரத்து 900 குடும்பங்களைச் சேர்ந்த 25 ஆயிரத்து 557 பேர் - இந்த கடற்கொந்தளிப்பு காரணமாக பாதிக்கப்பட்டுள்ளனர் என, முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் மேரி இமெல்டா சுகுமார் கடைசியாக வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இந்த மாவட்டத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள இறப்பு அறிக்கையின் பிரகாரம் - 2 ஆயிரத்து 111 பேர் இறந்துள்ளதாகவும், ஆறு திணைக்களங்களைச் சேர்ந்த 10 அரச உத்தியோகத்தர்கள் மரண மடைந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

30 வணக்கத்தலங்களுக்கு சேதம ஏற்பட்டுள்ளதாகவும், இதில் 16 இந்து ஆலயங்களும், 13 தேவாலயங்களும், பள்ளிவாசல் ஒன்றும் அடங்கும். இந்த ஸ்தலங்களுடைய சேத மதிப்பு 160 மில்லியன் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கட்டட வேலை பூர்த்தியடைந்தும் திறக்கப்படாத சுகாதார நிலையம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - பூநகரி 4 ஆம் கட்டைப் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையமொன்று, கடந்த 4 மாதத்துக்கு முன்னரே கட்டிமுடிக்கப்பட்டு, சூரிய மின்கலத் தொகுதியும் பொருத்தப்பட்ட நிலையில், இதுவரை திறந்து வைக்கப்படாமல் உள்ளது.

இந்த சுகாதார நிலையம் திறந்து வைக்கப்படாமையால், பூநகரியின் கறுவாக்குளம், நெடுங்குளம், 4 ஆம் கட்டை ஆகிய கிராமங்களில் வசிக்கும் மக்கள் 3 கிலோமீற்றர் தூரம் வரை சென்றே வைத்திய சேவையைப் பெறவேண்டியுள்ளது.

எனவே, உரிய தரப்பினர் இதைக் கவனத்தில் எடுத்து ஆரம்ப சுகாதார நிலையத்தை திறந்துவைத்து சேவையாற்றும்படி அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# நிகொட் நிறுவனத்தால் வழங்கப்பட்ட கடனை மீளவும் அறவிடவேண்டாமெனக் கோரிக்கை

கடந்த ஆண்டு நிகொட் நிறுவனம் வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச அங்கத்துவ சங்கங்களின் அங்கத்தவர்களுக்கு - தும்புக்கண்ணாடியிழைப் படகுகள், வெளியிணைப்பு இயந்திரங்கள், கட்டுமரங்கள், வலைகள் கொள்வனவு செய்வதற்கு, சுழற்சி முறைக்கடன் திட்டத்தின்கீழ் 300 லட்சம் ரூபாவை, 14 அங்கத்துவ சங்கங்களுக்கும் வழங்கியது.

இந்தக் கடனை மீள அறவீடு செய்யவேண்டாமென, வடமராட்சி கிழக்கு கடற் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் - நிகொட் நிறுவன திட்டப்பணிப்பாளரைக் கேட்டுள்ளது.

இந்தக் கடனில் மீள் அறவீடுகள் மாதாந்தம் ஒவ்வொரு சங்கமும் அறவிட்டு, சேரும் பணத்தில் அங்கத்தவர்களுக்கான தும்புக்கண்ணாடியிழைப் படகுகள், வலைகள் வெளியிணைப்பு இயந்திரம், கட்டுமரம் என்பனவற்றை சுழற்சிமுறைக் கடனாக வழங்கிவந்தது.

இந்த நிலையில், சுனாமி கடற்கொந்தளிப்புக் காரணமாக இந்தப் பிரதேசத்தில் ஆயிரத்து 216 பேர் கொல்லப்பட்டுள்ளனர். சுமார் 2 ஆயிரத்து 200 பேர்வரை காயமடைந்துள்ளனர். எஞ்சிய மக்கள் அகதிகளாக நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளனர். இவர்களின் சகல கடற்தொழில் உபகரணங்களும், வாழ்விடங்களும் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன.

ஆகவே, சுழற்சிக்கடன் அடிப்படையில் வழங்கப்பட்ட பணத்தை மீளப்பெறுவது இயலாத காரியம்.

இதனைக் கருத்திற்கொண்டு, இவர்களின் கடன்களை ரத்துச் செய்யுமாறு வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் - கடற்தொழில் நீரியல்வள அமைச்சின் உதவிப் பணிப்பாளர் ஊடாக நிகொட் நிறுவன திட்டப் பணிப்பாளருக்கு கோரிக்கை விடுத்துள்ளனர். (21)

# தேசிய அடையாள அட்டைகளை பெறுவதற்கு நடமாடும் சேவை

(கிளிநொச்சி)

சுனாமி அனர்த்தத்தின் போது தேசிய அடையாள அட்டைகளைத் தொலைத்தவர்கள் மற்றும் 16 வயது பூர்த்தியடைந்தும் இதுவரை அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ளாதவர்களின் நன்மை கருதி - எதிர் வரும் 19, 20 ஆம் திகதிகளில் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களில் நடமாடும் சேவை இடம்பெறவுள்ளது.

இதன்போது - பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் இல்லாதவர்கள் சத்தியக் கடதாசி அல்லது பிறப்பு சம்பந்தமான நம்பத்தகுந்த ஆவணங்களைச் சமர்ப்பிப்பதன் மூலம், அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## சுனாமியின் போது தவறவிடப்பட்ட

# வாகன சான்றிதழ்களின் பிரதிகளை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை

சுனாமி அனர்த்தத்தின்போது தவறவிடப்பட்ட சாரதி அனுமதிப் பத்திரங்கள், வாகனப்பதிவுச் சான்றிதழ்கள் ஆகியவற்றின் பிரதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக, கிளிநொச்சி அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக கிளிநொச்சி அரச அதிபர் அனுப்பிவைத்துள்ள செய்திக்குறிப்பில் - வாகனப் பதிவுச் சான்றிதழ்களை சுனாமி அனர்த்தத்தில் தவறவிட்டவர்களின் பதிவுகள், மோட்டார் வாகனப் போக்குவரத்து தலைமைக் காரியாலயத்தில் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. பாதிப்புக்குள்ளானவர் என்பதை உறுதிப்படுத்தும் கடிதத்தோடு, உரிமையை உறுதிப்படுத்தும் புகைப்படங்களும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

இவை தொடர்பான மேலதிக விபரங்களை கிளிநொச்சி மாவட்ட செயலக வாகனப் போக்குவரத்து கிளையில் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வடமராட்சி கிழக்கு கடற்கரையில் மரங்கள் கரையொதுங்குகின்றன

(மாமுனை)

அண்மை நாட்களாக வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில், மாமுனை தொடக்கம் சுண்டிக்குளம் வரையான கடற்கரையோரங்களில் பாரிய மரங்கள் கரையொதுங்குகின்றன.

சுனாமி கடல் அனர்த்தம் காரணமாக இந்தோனேசியா மற்றும் சுமாத்ரா தீவுகளின் கரையோரங்களிலுள்ள தேக்கு, கமுகு, தென்னை, மூங்கில் போன்ற மரங்களுடன் பெயர் தெரியாத பாரிய மரங்களும் பெருமளவில் கரையொதுங்குகின்றன.

இவற்றுடன் பல ஆயிரக் கணக்கான தேங்காய்களும் கரையொதுங்கியுள்ளன.

இந்தத் தேங்காய்களை உணவுத் தேவைகளுக்குப் பயன்படுத்த வேண்டாமென வானொலி, பத்திரிகைகள் மூலம் அறிவித்தும் கூட, மக்கள் உணவுத் தேவைகளுக்காக பாவிப்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

இந்தத் தேங்காய்களை உடைத்துப் பார்த்தபோது உள் தேங்காய் நீலநிறமாகக் காணப்படுகிறது. (21)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

அற்றம் மறைக்கும் பெருமை சிறுமைதான்
குற்றமே கூறி விடும்.

திருக்குறள்

# நமது நோக்கு

## மங்கள சமரவீரவின் ஒப்புதல் வாக்குமூலம்!

அரசதரப்பும் விடுதலைப்புலிகள் தரப்பும் யுத்த நிறுத்த உடன்படிக்கையைக் கடைப்பிடிப்பதில் மிகவும் உறுதியாகவே உள்ளன. இதில் எந்தவொரு சந்தேகமுமில்லை. ஆனால், போர் நிறுத்த உடன்பாட்டை முறியடித்து மீண்டும் ஒரு யுத்தத்தைத் தோற்றுவிக்க வேண்டும். நாட்டில் குழப்பத்தை உண்டுபண்ணி அதன் மூலம் அரசியல் ஆதாயம் பெறவேண்டும் எனத் திட்டமிட்டு இயங்கும் ஒரு குழுவினரே இப்படுகொலைகளைச் செய்துள்ளனர். இது ஒரு அப்பட்டமான யுத்தநிறுத்த மீறலேயாகும்.

இவ்வாறு ஒரு ஒப்புதல் வாக்கமூலத்தை தெரிவித்திருப்பவர் ஐக்கியமக்கள் சுதந்திரமுன்னணி முக்கியஸ்தரும், அமைச்சருமான மங்களசமரவீர அவர்களேதான்.

போர்நிறுத்த உடன்படிக்கையை அரசும் - புலிகளும் தான் செய்துள்ளனர். இந்தச்சமயத்தில் ஆயுதபாணிகளால் புலிகள் கொல்லப்பட்டுள்ளனர். எனவே, போர் நிறுத்தத்தை மீறியது அரசதரப்பா? புலிகள் தரப்பா? எனக் கேட்கப்பட்ட ஒரு கேள்விக்கே அமைச்சர் மேற்கண்ட விளக்கத்தைக் கொடுத்துள்ளார்.

மங்கள சமரவீர சாதாரணமான ஒருவரல்ல, ஊடகத்துறை அமைச்சராக மட்டுமல்லாது, அமைச்சரவைப பேச்சாரளராகவும் இருக்கும் இவர்தான் இன்றைய ஆட்சியைப் பொறுப்பேற்றுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணி என்ற கூட்டணி உருவாவதற்கு மூலகாரணமாக இருந்தவருமாவார்.

ஜனாதிபதிக்கும் - ஜே.வி.பியினருக்குமிடையே இணைப்பை ஏற்படுத்துவதில் தீவிரமாகச் செயற்பட்ட இவா தான், இன்றைய சமாதான எதிர்ப்புக் கூட்டணி ஆட்சியில் ஜே.வி.பியினரின் ஆதிக்கவலு அதிகரிக்கக் காரணமாகவும் அமைந்தவர்.

கடந்த ஐக்கிய தேசிய முன்னணி அரசின் ஆட்சிக் காலத்தில் உருவான சமாதான சூழலையும், பேச்சுவார்த்தை முன்னெடுப்புக்களையும் அதன் ஆரம்பம் முதலே வெளிப்படையாக எதிர்த்து வந்த இன்றைய ஆட்சிக்கூட்டணியில் அங்கம்வகித்து வரும் கட்சிகள் அனைத்தும் அன்று ஒன்றிணைந்து கொடுத்த அழுத்தத்தாலேயே அந்த அரசு ஜனாதிபதியால் கலைக்கப்பட்டு - ஒரு முக்கிய கட்டத்தை எட்டியிருந்த சமாதானப் பேச்சுக்கள் நிரந்தரமாக ஒரு தேக்கநிலையை அடைவதற்கும் காரணமானவர்களில் அமைச்சர் சமரவீரவும், அநுரா பண்டாரநாயக்கவும் மிக முக்கியமானவர்களாவர்.

இந்த அமைச்சர்தான் அரசும் - புலிகளும் இணைந்து மேற்கொள்ளும் சமாதான முயற்சிகளை விரும்பாத ஒரு பிரிவினரே இந்த மனிதாபிமானமற்ற, ஈனத்தனமான செயலைப் புரிந்துள்ளார்கள் என்று அறிக்கை விடுத்துள்ளார்.

அமைச்சரின் இந்தக் கூற்று அவரை நோக்கி சில கேள்விகளை எழுப்பவேண்டிய அவசியத்தை ஏற்படுத்தியுள்ளது. முதலில் அரசும், புலிகளும் இணைந்து மேற்கொண்ட போர்நிறுத்த உடன்பாடு என்று அவர் கூறியது குறித்து - அதாவது இன்றைய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு புலிகளுடன் எத்தகைய போர்நிறுத்த உடன்பாட்டையும் மேற்கொள்ளவில்லை. கடந்த ரணில் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசே அந்த உடன்பாட்டில் கைச்சாத்திட்டு, சமாதான முயற்சிகளை மேற்கொள்ளத் தொடங்கியது.

அப்போதும் இன்றைய ஆட்சியில் இணைந்து செயற்படும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், ஜே.வி.பியும் ஏனைய பேரினவாத தீவிரவாதிகளும் இந்த உடன்பாட்டையும், சாமாதான நகர்வுகளையும், அதற்கு அனுசரணையாக இருந்த சர்வதேச ஆதரவையும் வெளிப்படையாக எதிர்த்ததுடன் - அதனைச் சிதைக்க எத்தனையோ நடவடிக்கைகளையும் மேற்கொண்டனர்.

புதிய அரசு பதவியேற்றதிலிருந்து இன்றுவரை சமாதான முயற்சிகளுக்கு எந்தவித சாதகமான நகர்வையும் மேற்கொள்ளாதநிலையில், மீண்டுமொரு போருக்கான சூழலை உருவாக்கியதுடன், அதற்கான இராணுவத் தயாரிப்புக்களிலும் முனைப்புடன் செயற்பட்டுவருகின்றமை தெரிந்தவிடயமே. இந்த நிலையில், போர்நிறுத்த உடன்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்த எதனையும் மேற்கொள்ளாத இந்த அரசு, புலிகளுடன் போர்நிறுத்த உடன்பாட்டை மேற்கொண்டுள்ளது எனச் சொல்லமுடியுமா?


அடுத்து சமாதானத்திற்கு எதிரான சக்திகள் தான் இப்படுகொலைகளை மேற்கொண்டுள்ளனர் என்றால் அவர்கள் யார்? ஜே.வி.பியினரா, இராணுவத்தரப்பா, துணைப்படை என்ற பெயரில் அரசால் இயக்கப்படும் கூலிப் படைகளா? அல்லது ஏதேனும் அந்நிய சக்திகளா? எதுவானாலும் அவர்கள் அல்லது அவைகள் அரசுக்குத் தெரியாதவர்களாக இருக்கவேமுடியாது. அரசைச் சார்ந்தவர்களே அதனைச் செய்திருப்பார்கள் என்பதையும் - இது ஒரு அப்பட்டமான யுத்தநிறுத்த மீறல் சம்பவம் என்ற அமைச்சரின் வார்த்தைகளே உறுதி செய்கின்றன.

- யுத்த நிறுத்த உடன்பாட்டை மேற்கொண்டவர்களில் யாரோ ஒருவர் அதைமீறினாலே அது யுத்தநிறுத்த மீறல் என்று கருதப்படும்.

- அரசும் புலிகளும் மேற்கொண்ட போர்நிறுத்த உடன்பாடு மீறப்பட்டு புலிகள் தான் கொல்லப்பட்டுள்ளார்கள். எனவே, கொலையைச் செய்தவர்கள், அல்லது அதன் பின்னணியில் இயங்கியவர்கள் அரசு தரப்பினராகவே இருக்க வேண்டும் என்றே அர்த்தப்படுகிறது. இந்தவகையில அரச தரப்பு போர்நிறுத்த மீறலை மேற்கொண்டுள்ளது என்று அமைச்சர் ஒப்புதல் அளித்துள்ளார் என்றே நம்பலாம்.

- அமைச்சரின் ஊடகத்துறையே அன்றாடம் போர் நிறுத்த உடன்பாட்டை மீறும் வகையில் புலிகளைச் சீண்டி, அவர்களைப் போர்க்கோலம் கொள்ளத்தூண்டும் வகையில் அரச தொலைக்காட்சி மற்றும் வானொலிகளூடாக கீழ்த்தரமான நிகழ்ச்சிகளை ஒலி - ஒளி பரப்பிவருவதைப் பார்க்கும் போது போர்நிறுத்த மீறலை மேற்கொள்வோர் யார் என்பது தெளிவாகின்றதல்லவா!

## நாடும் நடப்பும்




## 'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# கௌசல்யன் படுகொலைக்கு மங்களவும்; பீரிஸும் சுட்டுவது எதை, யாரை?

'விடுதலைப் புலிகளின் மட்டு–அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேரு மற்றும் போராளிகள் மூவர் ஆகியோர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் காட்டுமிராண்டித் தனமானதும் மிலேச்சத் தனமானதுமான செயல். இது ஓர் அப்பட்டமான போர்நிறுத்த மீற[illegible]' என்று அரசாங்கத்தில் பொறுப்புள்ள அமைச்சராக இருக்கும் மங்கள சமரவீர கொழும்பில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்திருக்கிறார்.

இந்தக் கொலைச் சம்பவத்தின்பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகள் விவேகத்துடனும், நிதானத்துடனும் மிகவும் பொறுப்புணர்ச்சியுடனும் நடந்துகொண்டிருப்பதாகப் புலிகளுக்கு அமைச்சர் பாராட்டும் வழங்கியிருக்கிறார். இந்தச் செய்திகளையெல்லாம் நீரும் பார்த்திருப்பீர் என்று தெரியும். ஆனால், இப்படி ஒரு சம்பவத்துக்குக் கவலை தெரிவிப்பதுடனோ, புலிகளின் நிதானத்தைப் பாராட்டுவதுடனோ அரசு தனது பொறுப்பையும் கடமையையும் தட்டிக்கழித்துவிடமுடியுமா? என்று கேட்டார் நண்பர் பரமசிவம்.

அரசும் புலிகளும் இணைந்து மேற்கொள்ளும் சமாதான முயற்சிகளை விரும்பாத ஒரு குழுவினரே இந்த மனிதாபிமானமற்ற ஈனத்தனமான செயலைச் செய்துள்ளனர் என்று அமைச்சர் மங்கள சமரவீர சொல்லியிருக்கிறார்.

சம்பவம் நடந்த இடத்துக்கு 300 மீற்றர் தூரத்தில் இராணுவ முகாம்கள் இரண்டு இருப்பதாகச் சொல்லப்படுகிறது. சம்பவம் நடந்த சில நிமிடங்களிலேயே படையினர் – சீருடையிலும் சிவில் உடையிலும் அந்த இடத்துக்கு வந்திருக்கின்றனர். முன்னாள் எம்.பி.சந்திரநேருவின் வாகனத்தில் கௌசல்யனும் மற்ற மூவரும் பயணம் செய்கிறார்கள் என்ற தகவல் இராணுவச் சோதனை நிலையங்கள் மூலம் கொலைஞர்களுக்குப் போயிருக்கவேண்டும், அல்லது சந்திரநேருவின் பாதுகாப்புக்காக வந்த பொலிஸ்பாதுகாவலர்கள் மூலம் இரகசியமாகச் செய்தி அனுப்பப்பட்டிருக்கவேண்டும். எப்படியும் இந்தச் செய்தி ஆயுதப்படையினருக்குத்தான் கிடைத்திருக்கவேண்டும். இதனால் தாக்குதல் நடத்தியவர்கள் ஆயுதப்படையினரைச் சேர்ந்தவர்களாக இருக்கவேண்டும் அல்லது ஆயுதப்படையினருடன் நெருங்கிய தொடர்புடையவர்களாக இருக்கவேண்டும் என்று நான் சொன்னேன்.

நீர் சொல்வதில் நியாயமிருக்கிறது. முன்னரே கோடரிக்காம்புக்கும் ஆயுதப் படையினருக்கும் தொடர்பிருக்கிறதென்பது வெளிவந்த விஷயம். ஹெலிகொப்ரரில் அவர்கள் போய்ச் சந்தித்தது, உதவியளித்ததெல்லாம் முன்னரே வெளிவந்த செய்திகள். கோடரிக்காம்புடன் அமைச்சர் டக்ளஸ் தொடர்புகொண்டிருந்ததாகவும் ஜனநாயக அரசியலுக்கு வருவதற்கு கோடரிக்காம்பு டக்ளஸின் உதவியைக் கோரியதாகவும் டக்ளஸே தகவல் வெளியிட்டிருந்தார். ஆனால், கோடரிக்காம்பு எங்கே இருக்கிறார் என்ற இரகசியத்தை மட்டும் எவரும் வெளியிடவில்லை. இந்த ஒளிவு மறைவு மூலம் கோடரிக்காம்புக்கு படையினரே பாதுகாப்பு வழங்கிக் காப்பாற்றி வருவதாகப் பொதுமக்கள் மத்தியில் பரவலாகப் பேச்சடிபட்டது.

கோடரிக்காம்பின் பெயரில் நடந்த சில தாக்குதல் கொலைகளைத் தொடர்ந்து புலனாய்வுத் துறைக்கும் அவர்களுக்கும் தொடர்பிருப்பதாகச் சொல்லப்பட்டது. இதைப் புலனாய்வுத் துறையும் படைத்தரப்பும் வன்மையாக மறுத்தன. ஆனால்,தொடர்ந்து நடந்த தாக்குதல்களில் புலனாய்வுத் துறையினருடன் கோடரிக்காம்பின் சகாக்கள் என்று கருதப்பட்டவர்களும் மாண்டதுடன் கொஞ்சம் அடங்கிப் போயிருந்தனர் என்றார் பரமசிவம்.

கிழக்கு மாகாண மக்களுக்காகக் கண்ணீர் வடித்த கோடரிக்காம்பும் அவர் சகாக்களும் சுனாமிப் பேரழிவினால் கிழக்கு மக்கள் குறிப்பாக மட்டு–அம்பாறை மக்கள் பெரும் பாதிப்புக்குள்ளானபோது உதவியும் ஆறுதலுமளிப்பதற்கு முன்வராமல் மக்களுக்கு ஓடோடிச் சென்று உதவியும் ஆறுதலுமளித்த கௌசல்யனையும் மற்றவர்களையும் மறைந்திருந்து தாக்கியழித்ததாக இராணுவ அதிகாரி ஒருவர், தானே பட்டும் படாமலும் சொல்லியிருக்கிறார். இது வழமைபோல கோடரிக்காம்பின் பெயரால் படைத் தரப்பினரே செய்திருக்கலாமல்லவா? என்றேன் நான்.

புலிகளும் அரசும் இணைந்து சமாதான முயற்சிகள் மேற்கொள்வதை விரும்பாத ஒரு பிரிவினரே இந்தச் செயலைச் செய்திருப்பதாக அமைச்சர் மங்கள சமரவீர கூறுகிறார். இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் இராணுவ முகாம்களுக்கிடையில் இந்தத் தாக்குதல் பதுங்கியிருந்து நடத்தப்பட்டிருக்கிறது. இந்தப் பகுதியில் ஆயுதந்தாங்கிய சிலர் பதுங்கியிருந்து தாக்குதல் நடத்துவதென்றால் அந்தப் பகுதியில் பாதுகாப்புக்கென முகாம் அமைத்துள்ள இராணுவம் என்ன செய்தது? இந்தத் தாக்குதல் இராணுவ அதிகாரி சொல்வதுபோல் கோடரிக்காம்பைச் சேர்ந்தவர்களால் நடத்தப்பட்டிருக்கலாம் என்றாலும் ஆயுதப் படையினருக்குத் தெரியாமல் நடத்தப்பட்டிருக்கமுடியாது.

சமாதான முயற்சியை விரும்பாத ஒரு பிரிவினர் என்று அமைச்சர் சமரவீர கூறும் பிரிவினர் அரசியல் பிரிவினரா? ஆயுதப் படைகளைச் சேர்ந்தவர்களா? புலிகளும் அரசும் சமாதான முயற்சிகளை விரும்பாத ஒரு பிரிவினர் என்று சமரவீர சொல்வதைப் பார்த்தால் அது ஜே.வி.பியினரையே குறிக்கும். அவர்கள்தான் இருதரப்பும் சமாதான முயற்சியில் இணைந்து செயற்படுவதை எதிர்த்து வந்துள்ளனர். எனவே இந்தக் கொலைகளில் ஜே.வி.பியினரின் பங்கு எந்தளவுக்கு இருக்கிறதென்பது ஆராயப்படவேண்டுமென்றார் பரமசிவம்.

நீர் சொல்வதும் சரிதான். இதேசமயம் கௌசல்யன் உள்ளிட்ட நான்கு போராளிகளின் படுகொலைக்கு இராணுவத்தில் இயங்கும் ஒரு இனந்தெரியாத குழுவே காரணம் என்று ஐக்கிய தேசியக்கட்சி குற்றம்சாட்டியிருக்கிறது. கொழும்பில் நடந்த ஊடகவியலாளர் மாநாட்டிலேயே ஐ.தே.க.பிரமுகர் முன்னாள் அமைச்சருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் இப்படிச் சொல்லியிருக்கிறார். சிறிலங்கா இராணுவத்தைப் பற்றி மட்டுமல்ல, முப்படைகளைப் பற்றியுமே பேராசிரியர் பீரிஸுக்குத் தெரிந்திருக்கவேண்டும்.

1956ஆம் ஆண்டுக்குப்பின் காவற்துறையிலும் சரி ஆயுதப் படைகளிலும் சரி இணைந்தவர்களுக்கு ஆயுதப் பயிற்சியளிக்கப்படுகிறதோ இல்லையோ இனத்துவேஷம் ஊட்டி வளர்க்கப்பட்டு வந்திருக்கிறது.

முன்பு நாட்டைப் பிரிக்கப்போகிறார்கள் என்று சாத்வீகப் போராட்டம் நடத்திய தமிழ் அரசியல் கட்சித் தலைவர்கள்மீது துவேஷத்தை ஏற்படுத்தித் தமிழ் விரோத மனப்பான்மை வளர்க்கப்பட்டது. இப்பொழுது விடுதலைப் புலி எதிர்ப்பென்ற பெயரில் தமிழின விரோதம் வளர்க்கப்படுவதுடன் தமிழின அழிப்பு ஊக்கப்படுத்தப்படுகிறது.

இந்த எதிர்ப்பு நடவடிக்கைகளால் அதிகாரங்களையும் வசதி வாய்ப்புக்களையும் அனுபவித்து சுவை கண்ட ஆயுதப் படையைச் சேர்ந்த சிலருக்கு அதிகார ஆசை ஏற்பட்டிருக்கலாம்.

இலங்கையின் அயல் நாடுகளான பாகிஸ்தான், பர்மா, ஏன் பங்களாதேசமும்கூட இந்த அதிகார ஆசையினால் இராணுவ ஆட்சிக்கு உட்பட்டதற்கு அங்கு நடந்த உள்நாட்டு அரசியல் போரும் அரசியல் தகராறுகளுமே காரணமாகும்.

புலிகள் – அரசு சமாதான முயற்சிகளை விரும்பாத ஒரு பிரிவினர் என்று மங்கள சமரவீர குறிப்பிடுவதும் இராணுவத்தில் இயங்கும் இனந்தெரியாத ஒரு குழுவினர் என்று பேராசிரியர் பீரிஸ் குற்றஞ்சாட்டியிருப்பதும் சிந்தனைக்குரியவை என்றேன்.

நீர் சொல்வதில் நியாயமிருக்கிறது. ஆனாலும் சிறிலங்காவின் புலனாய்வில் எனக்கு நம்பிக்கை இல்லையென்றார் பரமசிவம்.

1974ஆம் ஆண்டின் ஹர்த்தாலும், ரயர் எரிப்பும் தொடக்கமே யாழ்ப்பாணம் விழாக்கோலம் பூண்டது. நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு நடப்பதை அரசு இடையூறு செய்தது. மக்கள் பொங்கி எழுந்து வீதிகளெங்கும் வாழை, கமுகு மற்றும் மகரதோரணங்களால் அலங்கரிக்கப்பட்டு விழாக்கோலம் கொண்டது.

இங்கு கௌசல்யன் மற்றும் சகபோராளிகளின் படுகொலையைக் கண்டித்து நேற்று யாழ்ப்பாணத்தில் துக்கத்தை வெளிப்படுத்த கடையடைப்பு எனும் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. பல இடங்களிலும் வாகனங்களிலும் கறுப்பு வெள்ளைக் கொடிகள் பறந்தன. கடைகள் மூடப்பட்டிருந்தன. எங்கும் அமைதி நிலவியது.

ஆனால், ஒரு சில இடங்களில் அர்த்தமில்லாமல் வாழை, பப்பா மற்றும் மரங்களை வெட்டிக் கட்டியிருந்தார்கள். வீதிகளிலும் சந்திகளிலும் ரயர்களைப் போட்டு எரித்தார்கள். எதற்காக? யார்? இதைச் செய்கிறார்கள் என்று எவரோ செய்கிறார்கள். சுற்றுச் சூழலை மாசுபடுத்துகிறார்கள். மக்கள் மனம் புழுங்கி வேதனையடைகின்றனர். வேலையில்லாத சிலருக்கு இது வேடிக்கை, பலருக்கு இதுபெரும் வேதனை. ரயர் எரிக்கும் செயலுக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். யார் செய்வது?

பகுதி – 37

சங்கர்



# காற்றே நீ எம் கதை கேளாயோ...
# அலையே நீ எம் நிலை உணராயோ...

இந்தத் தேவாலயத்தில் ஆராதனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த 16 பிள்ளைகள் சுனாமி அனர்த்தத்தில் உயிரிழந்தனர். இந்தப் பிள்ளைகளில் ஒன்று, மட்டக்களப்பு பல்கலைக்கழக விரிவுரையாளர் சுகுமாரின் ஒரேயொரு பிள்ளையான ஏஞ்சல் (வயது 16) தனது புது பியானோவைக் கொண்டு தேவாலயத்துக்கு இசைக்கச் சென்ற ஏஞ்சல் - அவரது எதிர் வீட்டில் உள்ள நண்பியின் கையைப் பிடித்தபடி அமர்தகழியிலுள்ள குளத்தில் சடலமாக மீட்கப்பட்டார்.

இந்தச் சம்பவத்தில் தப்பிய போதகரின் மகளான வத்ஸனா இப்போது தண்ணீரைக் கண்டாலே பயப்படுவதாக எனது நண்பர் ஒருவர் குறிப்பிட்டார்.

இந்தச் சம்பவத்தில் போதகரின் மனைவியும், இன்னொரு மகளும் உயிரிழந்தனர். அம்மாவைக் கொண்டுபோனது. சாம்பல் நிற அலை என்றும் முதல் அலை நீலமாக இருந்தது என்றும் உளவியல் ரீதியாகப் பாதிக்கப்பட்ட இந்தக் குழந்தை கூறுவதாக நண்பர் மேலும் குறிப்பிட்டார்.

08.02.2005 அன்று வாகரைப் பிரதேசத்தில் நின்றிருந்தேன், முதல் நாள் இரவு வெலிக்கந்தப் பகுதியில் இடம்பெற்ற தாக்குதலில் பலியான மட்டு - அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் லெப்.கேணல் கௌசல்யன் (இளையதம்பி லிங்கராசா பண்டாரியாவெளி), மேஜர் புகழன் (சிவலிங்கம் சுரேஸ்காந்தன் தன்னாமுனை), மேஜர் செந்தமிழன் (தம்பிராசா கந்தசாமி - சின்னவத்தை), 2 ஆம் லெப்.விதிமாறன் (சிவபாதம் மதன் - செட்டிபாளையம்) நாட்டுப் பற்றாளரான முன்னாள் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேரு, ஆதரவாளரான சாரதி துசிகரன் ஆகியோருக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக அங்கே மஞ்சள், சிவப்புக் கொடிகளும், கறுப்பு மற்றும் வெள்ளைக் கொடிகளும் கட்டப்பட்டிருந்தன.

ஒரு சோகமயமான சூழல் - சுனாமியின் பாதிப்பிலிருந்து ஓரளவு மீண்டுகொண்டிருக்கையில், மக்களுக்கு இப்படியான செய்தி கிடைத்துள்ளது. சில தினங்களுக்கு முன்னரும் கிரானில் இரு போராளிகள் இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் வீரச்சாவெய்தியிருந்தனர். எதிரிகள் இடைநிறுத்தியுள்ளதை தற்போது துரோகிகள் மேற்கொள்கின்றனர்.

விடுதலைப் புலிகளுடன மேற்கொள்ளப்பட்ட போர் நிறுத்த உடன்பாட்டின் ஒரு அம்சம் ஆயுதக் குழுக்களை நிராயுத பாணிகளாக்குவது. ஆனால், அது மறந்த கதையாகிவிட்டது. மேலும் இவ்வாறானவர்களுக்கு ஆயுதம் வழங்கி புலிகளுக்கெதிரான தாக்குதல்களை ஊக்குவிப்பதுடன், அவர்களுக்கு பாதுகாப்பும் வழங்கப்படுகிறது. அது போதாது என்று புலிகளின் போக்குவரத்துப் பற்றிய தகவலும் உடனுக்குடன் வழங்கப்படுகிறது. இவ்வாறு வழங்கப்பட்ட தகவலின் பிரகாரம் ஏற்கனவே லெப்.கேணல் பாவா மேஜர் யோகா ஆகியோர் வீரச்சாவைத் தழுவ வேண்டி ஏற்பட்டது.

கௌசல்யனின் சம்பவம் மேலும் ஒரு விடயத்தைத் தெளிவுபடுத்துகிறது. முன்னாள் எம்.பி. அரியநாயகம் சந்திரநேருவுக்குப் பாதுகாப்பாக இரு பொலிஸாரும் அந்த வாகனத்தில் சென்றுள்ளனர்.

இவர்கள் இருவரும் தமிழர்கள். தாக்குதல் நடத்துவதற்காக தகவல் வழங்கிய படையினர் அந்த இரு பொலிஸாரையும் தமது படையில் உள்ளவர்கள் என்று நோக்குவதை விடுத்து, அவர்களும் தமிழர்கள் தானே என்ற முடிவுக்கு வந்துள்ளனர்.

இதேவேளை, எங்கேயாவது ஆயுதப் படையில் உள்ள சிங்களவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டிருந்தால், ஜே.வி.பி. தேசாபிமானிகள் முன்னணி, ஹெல உறுமய போன்றவை சும்மா இருந்திருக்குமா? இந்தக் கட்டுரைத் தொடரில் முன்னர் வாழைச்சேனைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தவராஜா தீபனை படையினர் வாழைச்சேனை சந்தியில் வைத்து நையப்புடைத்ததை ஏற்கனவே குறிப்பிட்டிருந்தேன். அது போன்றதொரு நிலையே. தற்போது இந்த இரு பொலிஸாரும் தாக்கப்பட்டாலும்,

பரவாயில்லை என்ற முடிவுக்கு அவர்கள் வரக்காரணமாகியது.

சரி மீண்டும் வாகரை நிலவரத்துக்கு வருவோம். வாகரைப் பகுதி மட்டக்களப்பு மாவட்டத்தில் மிகவும் பின் தங்கிய பிரதேசமாக இருக்கிறது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியாக இருப்பதால், அபிவிருத்தியில் வன்னியைப் போன்று பார்க்கும் நிலையே இங்குள்ளது.

இங்கு வந்து சேர்ந்ததும் இந்தப் பகுதியின் கட்டளைப் பணியகத்தைச் சேர்ந்த லெப்.கேணல் அறிவைச் சந்தித்தேன். அவர் இங்குள்ள நிலைமைகள். சுனாமி கொந்தளிப்பு தொடர்பான சில விடயங்களைக் குறிப்பிட்டார்.

சுனாமி கடற்கொந்தளிப்பு நிகழ்ந்தபோது, இங்கிருந்த போராளிகளே மக்களைக் காப்பாற்ற வேண்டியநிலை இருந்தது. மக்களை உழவு இயந்திரம் மூலம் கொண்டு சென்று பாதுகாப்பான இடங்களில் விட்டது முதல், எமது பணி ஆரம்பமானது. அனைத்துப் போராளிகளையும் இந்தப் பணியில் ஈடுபடுத்த வேண்டியிருந்தது.

குறிப்பாக வெருகலுக்கு அண்மையிலுள்ள மலையில் மக்களை ஒற்றிய ஒரு விடயத்தைக் குறிப்பிடலாம். இதில் பிரசவம் நிகழ்ந்து ஒரு சில நாட்களே ஆன குழந்தைகளும் இருந்தன. நாங்கள் எம்மிடமிருந்த சில படங்குகளைக் கொண்டு சென்றோம். மலையில் நடவும் முடியாது. இதற்காக எமது பையன்களே, தாய்மாரையும், குழந்தைகளையும் டென்ற்களைப் பிடித்தபடி நின்று காப்பாற்றினர். நிலைமை கொஞ்சம் சீராகும் வரை இப்படியாக நிற்க வேண்டியிருந்தது. சடலங்களை இடிபாடுகளிலிருந்து மீட்பது முதல், உணவு விநியோகத்துக்கான ஏற்பாடுகளையும் நாமே மேற்கொண்டோம். பனிச்சங்கேணிப் பாலம் உடைந்ததால் மட்டு.மாவட்டத்தில் துண்டிக்கப்பட்ட பகுதியாகிவிட்டது வாகரை.

இந்த நிலையில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர், எமது மருத்துவப்பிரிவினர் போன்றோருடன் தொடர்புகொண்டு உணவு, மருத்துவம் முதலான ஏற்பாடுகளைச் செய்தோம்.

இவ்வாறு அன்றைய நிலைமைகளை விளக்கிவிட்டு, மக்களின் வாழ் நிலைபற்றி பின்வருமாறு குறிப்பிட்டார்.

இது மிகவும் பின்தங்கிய பகுதி. கல்வி தொடர்பான ஆர்வம் மிகவும் குறைந்தளவிலேயே உள்ளது. இதற்கான வசதிகளும், ஏற்பாடுகளும் மிகவும் குறைவு. ஒரு ரயர்க் கடைகூட இல்லை. எதற்கும் வாழைச்சேனைப் பகுதிக்கே போகவேண்டியுள்ளது. (தொடரும்...)

இறையியல்

= மோ.தார்சீசியஸ் =

# சோதனைகளைச் சாதனைகளாக்குவோம்

## தவக்காலம் - 1ஆம் ஞாயிறு.

**“மனிதன் அப்பத்தினால் மட்டுமல்ல, மாறாக கடவுளின் வாய்ச்சொல் ஒவ்வொன்றாலும் வாழ்வர்” (மத் 4:4)**

பரீட்சையில் எப்படியாவது பாஸ் பண்ண வேண்டும் என்று முயற்சிக்கிறான் மாணவன். இது



அவனுக்கு சோதனைக்காலம். வீட்டிலிருக்கும் பெண் பிள்ளைகளுக்கு வாழ்வு எப்போது வரும்? இது பெற்றோருக்கு ஒரு சோதனை. வேலையற்ற இளைஞர்கள் தங்களுக்கு எப்போது வேலை வாய்ப்பு வரும் என்ற கவலை. இது அவர்களுக்கு ஒரு சோதனை. இப்படியாக சோதனைகளுக்கு உட்படாத எவரும் இன்றும் இவ்வுலகில் இல்லை எனலாம். இதனால் தான் ஒரு கவிஞன் - ‘சோதனை மேல் சோதனை போதுமடா சாமி’ என்று பாடினார்.

இன்று ஆரம்பிக்கும் தவக்காலத்தின் முதலாம் வாரம் எமக்கு இந்தச் சோதனை பற்றியே எடுத்துக் கூறுகிறது. சோதனையை வைப்பவன் வேறுயாருமல்ல. சாத்தான் இவன் எந்தநேரமும், எப்போதும், எந்த இடத்திலும் எப்படி மனிதனைச் சோதிக்கலாம்? அவனை வீழ்த்தலாம். அவனை வெற்றி கொள்ளலாம் என்ற ஆதிமுதற் கொண்ட சோதனையைத் தொடர்ந்து கொண்டு வருகிறது.

இந்த உலகில் சாத்தான் மேற்கொண்ட முதற் சோதனை - நம் ஆதிப் பெற்றோர்களிடத்தில் தருணம் பார்த்து, சந்தர்ப்பம் பார்த்து ஆரம்பித்தது. அதிலே மாபெரும் வெற்றியும் கண்டது. மனிதன் வீழ்ந்தான். பாவம் நுழைந்தது. மரணம் புகுந்தது. அன்று வெற்றி கண்ட சாத்தான் இன்று சாதாரண மனிதனை அல்ல, கடவுளின் மகன் இயேசுவிடம் தன் திட்டத்தை செயற்படுத்த முனைந்தது. அதுவும் எடுத்த எடுப்பிலல்ல, காத்திருந்து, பார்த்திருந்து செயற்படுத்த முனைந்தது.

இயேசு நாற்பது நாள் பாலை வனாந்தரத்தில் நோன்பிருந்தார். உண்ணா நோன்பிருந்தார். பசி களைப்பு, தாகம் இத்தனைக்கும் மத்தியில் சாத்தான் தன் கெட்டித்தனத்தைக் காட்ட முனைந்தான். இதன் மூலம் இறை மகன் இயேசு சோதனைக்கு ஆளானார். அதே நேரம் வேதனைக்கும் ஆளானார். சாத்தான் இறைமகனைச் சோதனைக்குட்படுத்தினால், நாமெல்லாம் எந்த மட்டில்.

பசியால் இருப்பவனுக்கு உணவு எப்போது கிடைக்கும்? எங்கிருந்து கிடைக்கும்? என்று காத்திருப்பான். அதேபோன்றுதான் இயேசுவும் உண்ணா நோன்பிருந்த பின் தூய ஆவியினால் பாலை நிலத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார். பசியாயிருக்கும் மனுமகனைப் புசிக்க வைத்து, அவரைக் குழப்ப வேணடி, நீர் இறை மகன் என்றால் இந்தக் கல்லை அப்பமாக்கும்” என்றது. ஆனால் இறைமகனோ, சாத்தானின் திட்டத்தை அறிந்து, “மனிதன் அப்பத்தினால் மட்டும் வாழ்வதில்லை” என்ற பதில் சாத்தானுக்கு சவுக்கடியாயிற்று. (லூக்.4:4)

அடுத்து அலகையானது - அவரை அழைத்துச் சென்று உலக அரசுகளைக்காட்டி, நீர் என்னை வணங்கினால், இவை அனைத்தும் உமக்குச் சொந்தம் என்று உலக ஆசையை, பற்றை ஊட்டியது. ஆனால் இயேசுவோ “உன்கடவுளாகிய ஆண்டவரை வணங்கி அவர் ஒருவருக்கே பணிசெய்வாயாக” என்றார். லூக்.4:8)

மீண்டும் சாத்தான் தோல்வியைத் தழுவிக் கொண்டது. கடைசியாக மூன்றாம் முறையாக-கோயில் கோபுரத்தின் உச்சியில் அழைத்துச் சென்று, “நீர் இறை மகன் என்றால் இங்கிருந்து கீழே குதியும் பார்க்கலாம்” என்றது. இந்தமுறை இயேசு சாத்தானை நோக்கி “உன் கடவுளாகிய ஆண்டவரைச் சோதிக்க வேண்டாம்” (லூக்.4:9-12) என்றார். சாத்தான் சாகடிக்கப்பட்டான். அலகை வீழ்ந்தது. இயேசு உலகை வென்றார்.

அன்று நம் ஆதிப்பெற்றோர் இறை ஆவியைப் பெறாத நிலையில் அலகையின் வலையினில் வீழ்ந்தார்கள். ஆனால், இன்றோ தூய ஆவி அவரோடு இருந்ததால் அலகையை வென்றார்.

இன்றைய வாழ்விலே நாமும் பலதரப்பட்ட சோதனைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியவர்களாக உள்ளோம். உலக காரியங்களில் பெரும் நாட்டம், அதிகாரம், பதவி மோகம், பேராசை, குறுக்கு வழிகளில் செல்வம் திரட்டல், மாற்றான் பொருட்களை அபகரித்தல் போன்ற சோதனைகள் எம்மை நெருக்குகின்றன. ஊனியல்பின் இசசைகளைப் பூர்த்திசெய்ய நம்மை இடைவிடாது தூண்டிக் கொண்டே இருக்கின்றான். உண்டு குடித்து உல்லாசமாக வாழ் என்கிறான், ஆனால் இவற்றில் நாம் நாட்டம் காட்டாது தூயஆவியின் துணை கொண்டு, மனிதன் உணவினால் மட்டும் உயிர்வாழ முடியாது.

இறைவனின் வார்த்தை உயிரும், ஆவியுமாகும் என்பதை உணர்வோம். செல்வத்தில் செருக்கு கொள்வது என்பது இன்றைய மனிதனின் மாபெரும் சோதனை.

அழிவுக்குச் செல்லும் பாதை அகன்றது, வாழ்வுக்குச் செல்லும் பாதை குறுகியது. (மத்.7:13-14)

“சோதனைக்கு உட்படாதபடி செபியுங்கள்” (லூக்.22:46) என்கிறார் நம் ஆண்டவர்.

எனவே நாம் அன்றைய சோதனைகளையும், இன்றைய நமது சோதனைகளையும் ஒப்பிட்டு இறை விசுவாசத்தோடு போராடுவோம். வெற்றிகொள்வோம். எத்தகைய சோதனைகள் எமக்கு அடுக்கடுக்காய் வந்தாலும், அத்தனையையும் சாதனைகளாக மாற்றுவோம், வேதனைகளை விட்டொழிப்போம். இயேசுவின் போதனைகளைக் கைக்கொள்வோம்.

இந்தத் தவக்கால ஆரம்பத்தைத் தகுந்த முறையில் பயன்படுத்தி, தூய ஆவியின் துணையை நாடி செபிப்போம். ✝

## தவக்கால நற்சிந்தனை

**“இயேசு, பாலை நிலத்துக்கு தூய ஆவியால் அழைத்துச் செல்லப்பட்டார்” (மத்.4:1)**



= மோ.தார்சீசியஸ் =

அலகை பெரும்பாலும் சோதனையின் மூலம் தனிப்பட்ட மனிதனைத் தாக்குகின்றான். மனிதன் வெகு எளிதில் தோற்கடிக்கப்படுவதற்கு இரண்டு காரணகள் உண்டு. ஒன்று - உலகத்தின் இச்சைகள். மற்றையது - சரீரத்தின் இச்சைகள், இந்த உலகததின் வழி முறைகளிலேயே மூழ்கி இருக்கும் படி, ஆசை கொள்ளும் படி, மனிதனைத் தூண்டுகிறது. உலகம தரும் செல்வம், பொருள், இன்பம் இவற்றில் நாட்டம் கொள்ள, அலகைத் தூண்டுகிறது. ஆனால் இறை வார்த்தையோ, பொருளாசையோ எல்லாத் தீமைகளுக் கும் ஆணிவேர் என்கிறது. இந்த உலகின் இச்சையை யும், மாமிசத்தின் இச்சைகளையுமே பயனபடுததி ஆதிப்பெற்றோரைச் சோதித்து அலகை வெற்றியும் கண்டது. இதனாலேயே நம் உடலானது பாவ இயலபால் கறைப்பட்டுள்ளது. நம்மைப் போலவே இயேசுவும் எலலாவற்றிலும் சோதிக்கப்பட்டார் என்றாலும், அவர் பாவமில்லாதவராக இருந்தார். தூயஆவி அவரோடு இருந்தது. இதனால் அவர் அலகையை வெற்றி கணடார். எனவே நாமும் தூய ஆவயின் துணைகொணடு சாத்தானை வெல்ல இந்தத் தவக் காலத்தைத் தகுந்த முறையில் பயன்படுத்துவோம்.

# பாகிஸ்தானில் கடும் மழை; 150 மேற்பட்டடோர் உயிரிழப்பு!



பாகிஸ்தானில் கடந்த ஒரு வாரமாக பெய்துவரும் கன மழையால் 150 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். தென்மேற்குப் பகுதியில் உள்ள பலுசிஸ்தான் மா ள காணம் வெள்ளத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. அங் குள்ள சாதிகோர் அணை உடைப்பெடுத்து தண்ணீர் வெளியேறியதில் பாஸ்னி நகரம் பாதிக்கப்பட்டது. இத னால் பல கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.



சாதிகோர் அணை உடைப்பெடுத்து தண்ணீர் வெளி யேறிய பகுதி களில் 35 மீற்றர் அடி உயரத்திற்கும் 300 மீற்றர் அகலத்துக்கும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதில் சிக்கிப் பலியானவர்களில் 80 பேரின் உடல்கள் மீட் கப்பட்டுள்ளன.

நூற்றுக் கணக்கானோரைக் காணவில்லை. அவர்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டிருப்பார்கள் என்று அஞ்சப்படுகிறது. மழையால், பாகிஸ்தானில் பலியானோ ரின் எண்ணிக்கை 150 ஐத் தாண்டியுள்ளது.

30 ஆயிரம் பேர்வரை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டி ருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. மீட்புப் பணியில் படையி னர், துணைப் படையினர் மற்றும் கடற்படையைச் சேர்ந்த 4 ஆயிரம் பேர் ஈடுபட்டிருக்கின்றனர். 11 ஹெலிகொப் ரர்களும் வெள்ளத்தில் சிக்கியவர்களை மீட்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றன.



மழையால் பாதிக்கப்பட்ட பகுதியில் உள்ள 3 மிகப் பெரிய பாலங்கள் வெள்ளத்தில் அடித்துச்செல்லப்பட்டு விட்டன. இதனால் படகுகளில் சென்று மீட்பு பணி நடைபெறுகிறது. இதுவரை 1400 பேர் மீட்கப்பட்டுள்ளனர்.

ஆகோன் எல்லையில் உள்ள பள்ளத்தாக்கில் 30 பாகிஸ்தான் இராணுவ வீரர்கள் வெள்ளத்தில் அகப்பட்டுள் ளனர். அவர்களையும் மீட்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது. பாகிஸ்தானில் கடந்த 16 வருடங்களுக்குப் பிறகு முதன் முறையாக இப்போதுதான் அதிகளவு மழை பெய் திருக்கிறது. இதனால் இமாலயா, காரகோரம், இந்துகுஷ் மலைப்பகுதியில் நிலச்சரிவு ஏற்பட்டு போக்குவரத்து பாதிக் கப்பட்டுள்ளன. சீனாவிலிருந்து வரும் விமானப் போக்கு வரத்தும் முற்றிலும் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

# சுனாமியில் சிக்கிய பெண் 45 நாட்களின் பின் மீட்பு!

கடந்த டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தில் சிக்கிக் காணாமற்போயிருந்த இளம் பெண்ணொருவர் இந்தியாவில் உயி ருடன் மீட்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் அந்தமான் - நிக் கோபர் தீவுப் பகுதியில் இடம்பெற்றி ருக்கிறது.

45 நாட்களின் பின்னர் உயிரு டன் மீட்கப்பட்டிருக்கும் 18 வயதான ஜெசி என்ற இளம்பெண், காட்டில் இருந்த பழங்களை உண்டே உயிர் வாழ்ந்ததாகக் கூறியுள்ளார்.

கடந்த வாரம் 9 பேர் கண்டுபிடிக் கப்பட்ட இடத்துக்கு அருகிலேயே இந்த இளம்பெண்ணும் கடந்த புதன் கிழமை கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

சுனாமி அனர்த்தத்தால் அந்தமா னில் 2 000 பேர் வரை கொல்லப்பட் டதுடன், 1000 பேர் வரையில் காணா மற்போயுள்ளனர். இவர்களில், தற் போது கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் ஜெசியின் கணவரும் குழந்தையும் அடங்குகின்றனர்.

ஜெசி தனது கணவரும் ஒரு வயதுடைய குழந்தையும் உயிருடன் இருப்பதாக நம்பிக்கை தெரிவித்துள் ளார். இவரின் உடல்நிலை மிகவும் நலிவுற்றிருப்பதாகவும், நுளம்புக் கடியினால் ஏற்பட்ட தழும்புகள் காணப்படுவதாகவும் தெரிவித்த வைத்திய அதிகாரிகள், இவர் தற் போது மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரி வித்தனர்.

# சீனாவிடம் தஞ்சம் கோரியதற்காக 70 அகதிகளுக்கு தூக்குத் தண்டனை!

(வடகொரியா)

கம்யூனிச ஆட்சி நடைபெறும் வடகொரியாவில் அடக்குமுறை அதிகம். வசதிகள் குறைவு. இதனால் வடகொரியர்கள் அந்த நாட்டை விட்டுத் தப்பி யோடி - தென்கொரியா மற்றும் சீனா ஆகிய நாடுகளில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்து வருகிறார்கள். ஆனால் சீனா இவர்களை அகதிகளாகக் கருதாமல் சட்ட விரோதமாகக் குடியேறியவர்களாக கருதி அவர்களைக் கைது செய்து சிறை யில் அடைத்து திருப்பி அனுப்புகிறது.

சீனாவில் பிடிக்கப்பட்ட 70 அகதிகள் வடகொரியாவுக்குத் திருப்பி அனுப்பப்பட்டதை அடுத்து அவர்களை அந்த நாட்டு அரசு பொதுமக்கள் முன் னிலையில் தூக்கிலிட்டது. சீனாவில் மட்டும் 3 லட்சம் வடகொரியர்கள் தலைமறைவாக வசிப்பதாகக் கூறப்படுகிறது.

# கௌசல்யன் உள்ளிட்ட போராளிகளுக்கு கிளிநொச்சியில் அஞ்சலிக் கூட்டம்

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பா ளர் இ.கௌசல்யன் உள்ளிட்ட நான்கு போராளிகளும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரிய நாயகம் சந்திரநேரு ஆகியோரின் வீர வணக்கக் கூட்டம் நேற்று முன்தினம் கிளிநொச்சியில் நடைபெற்றது.

இந்த அஞ்சலி கூட்டதில் பல்லா யிரக்காணக்கானோர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

நேற்று முன்தினம் காலை கௌச ல்யன் உள்ளிட்ட நான்கு போராளி களினதும் உருவப்படம் தாங்கிய ஊர்தி, கிளிநொச்சி பொது விளையாட்டுமைதா னத்திலிருந்து புறப்பட்டு பண்பாட்டு மண்டபத்தைச் சென்ற டைந்தது.

அங்கு கிளிநொச்சி மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பா ளர் பூவிழி தலைமையில் ஆரம்ப மாகிய இந்த நிகழ்வில் மூன்று மாவீரர்களின் தாயாரான திருமதி பொன் தியாகம் பொதுச் சுடரினை ஏற்றிவைத்தார்.

மட்டு - அம்பாறை அரசியற் துறைப் பொறுப்பாளர் இ.கௌசல் யன், நாட்டுப்பற்றாளர் சந்திரநேரு ஆகியோரின் திருவுருவப் படத்துக்கு தமிழீழ அரசியற்துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் மலர் மாலையை அணிவித்தார்.

மேஜர் புகழனின் திருவுருவப் படத்துக்கு கிளிநொச்சி மாவட்ட அர சியற்துறைப் பொறுப்பாளர் கலை வாணன் சுடரேற்றி மலர் மாலை அணிவித்தார்.

கிளிநொச்சி அரச அதிபர் இராச நாயகம் மலர் அஞ்சலி செலுத்தி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

எழுத்தாளர் தனுசியா மகேந் திரன், மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் தமிழ்விழி, துயவன் அரசறிவியற் கல்லூரிப் பொறுப்பாளர் அரசண்ணா ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

இந்த நிகழ்வில் போராளிகள், தளபதிகள், பொறுப்பாளர்கள் ஆகி யோர் அஞ்சலி உரை நிகழ்த்தினர்.


## சிறு விளம்பரம்

### மாதாந்த தவணை அடிப்படையில்

சகலவிதமான வீட்டுப் பாவ னைப் பொருட்கள், மின்சார உப கரணங்கள், மோட்டார் சைக்கிள் என்பன மாதாந்தக் கட்டுப்பண முறையில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்புகளுக்கு: 360/5, பிர தான வீதி, (பஸ்தியன் சந்திக்கு அருகில்), யாழ்ப்பாணம். T.P 0776-544544, 077-6660177 (சி-1055)

### மோட்டார் சைக்கிள் வாடகைக்கு

மணித்தியாலம் மற்றும் நாளாந்த வாடகைக்கு இரு பாலா ருக்கும் மோட்டார் சைக்கிள் வாட கைக்கு வழங்கப்படும். தொடர்பு களுக்கு: 360/5, பிரதான வீதி, (பஸ்தியன் சந்திக்கு அருகில்), யாழ்ப்பாணம். T.P 0776-544544, 077- 6660177. (சி-1054)

### வீடு விற்பனைக்கு

வட்டுக்கோட்டை, வட்டு மேற்கு, வட்டு. சித்தங்கேணி வீதியில் (அத்தி யடி பிள்ளையார் கோயிலுக்கு அரு கில்) 7 1/2 பரப்பு காணியில் 3 அறை களுடன் சகல வசதிகளுமுடைய LUXURY HOUSE விற்பனைக்குண்டு. தொடர்பு:- 88 1/1, FUSSELS LANE, WELLAWATTAI COLOMBO - 06. T.P. N0 - 2366624, 077 - 6675467, 021 2222782. (1062)

## தேவை

தையல் வேலை தெரிந்த ஆண்கள் உடன் தேவை. மற்றும் தையல் வேலை பழக விரும்புவர்களும் தேவை.

தொடர்பு:
மேவின் தையல் நிலையம்,
இல.28, நவீன சந்தை
மேல் மாடி, யாழ்ப்பாணம். (சி-3817)

நிறைஞ்சனாஸ் சங்கானை
விஜயகாந், லயா, ராதாரவி நடித்த
கஜேந்திரா
கா.நே. (பு.நே) 11.00, 2.45, 6.00

நாதன்ஸ் யாழ்ப்பாணம் குளிரூட்டப்பட்டது
காதலர் தினத்தை முன்னிட்டு இன்று முதல்
டைடானிக் (தமிழாக்கம்)
LEOLARD - Dic APRIO - Kate [TITANIC]
கா.நே(பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30

மனோகரா திரையரங்கு யாழ்ப்பாணம்
இன்றுமுதல்
M.குமரன் Son of மகாலட்சுமி
கா.நேரம்: 10.30, 2.30
வெற்றி வாரமாக - இளைய தளபதி விஜய், திரிஷா நடித்த
திருப்பாச்சி
கா.நேரம்: 6.30, 9.30 (பு.நே.)
ஆசன முற்பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படும்

நாகம்ஸ் சுன்னாகம்

4 ஆவது வெற்றிவாரமாக
தேவதையைக் கண்டேன்
பு.நே. 11.00, 3.00, 7.00, 10.00
அடுத்த வெளியீடு திருப்பாச்சி

ராஜா யாழ்ப்பாணம்
அஜித் - திரிஷா நடித்த

ஜி
பு.நே: 10.30, 2.30, 6.30, 9.30


## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 06 - 02 - 1961



இறப்பு 18 - 02 - 1999

### செல்வராஜா சரோஜா

அன்பின் இருப்பிடமாய்
பண்பின் உறைவிடமாய்
எம்மை எல்லாம் வாழவைத்த
அன்பின் தெய்வமே
ஆண்டுகள் ஆறு சென்றிடினும்
ஆறுமோ எம் மனம்?
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகிறோம்!

நாவலடி,
அரியாலை,
யாழ்ப்பாணம். - குடும்பத்தினர்

(1063)

## மரண அறிவித்தல்கள்

### வல்லிபுரம் சின்னத்தம்பி (நல்லையா)

நெல்லியடியைச் சேர்ந்த வல்லிபுரம் சின்னத்தம்பி 12.02.2005 சனிக் கிழமை இயற்கையெய்தினார்.

அன்னார் பொன்னம்மாவின் அன்புக் கணவரும் இராஜேஸ்வரி, சிவயோகநாதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், புவனேந்திரன், கலா சோதி ஆகியோரின் மாமனாரும், தியாகலிங்கம் (லண்டன்), சந்திரகுமார் (லண்டன்), ஜெயபாரதி, பராபரன், பிரணவன் ஆகியோரின் அன்புப் பேர னும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 13.01.2005 காலை 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று சோனப்பு இந்து மயானத் திற்குத் தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*துரையன் தோட்டம் (மகாத்மா திரையரங்குக்குப் பின் ஒழுங்கை) நெல்லியடி.*

தகவல் :
க.புவனேந்திரன் (மருமகன்)

(சி-3820)

### கந்தையா தனபாலசிங்கம்

நுணாவில் மேற்கு 190 ஆம் கட்டையடியைச் சேர்ந்த கந்தையா தனபாலசிங்கம் அவர்கள் நேற்று (12.02.2005 சனிக்கிழமை) 2.30 மணி யளவில் காலமானார்.

அன்னார் பத்மாவதியின் அன்புக் கணவரும், தர்சினி, அஜந்தன் (ஹோட்டல் றொலெக்ஸ்), சுதர்சினி, ஜெனனி ஆகியோரின் அன்புத் தந்தையும், கர்ணராஜா, தாட்சாஜினி, செல்வரூபன் (இளவரசி ரெக்ஸ், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனும், கர்ணதர்சன், விதுஷன், யதுஷன், பங்கஜன், விதுஷாயினி, கீர்த்தனா ஆகியோரின் அன்புப் பேர னும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 13.02.2005 ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொல்லங்கிராய் காந்தாளம்பிட்டி இந்து மயா னத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.*

தகவல் :
அஜந்தன் (மகன்)
செல்வரூபன் (மருமகன்)

(சி-3819)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

## அரச ஹெலி வசதி வழங்காததால்

# சந்திரநேருவின் இறுதிச் சடங்கில் தமிழ்ச்செல்வன் பங்கேற்கவில்லை!

(மட்டக்களப்பு)

அரசாங்கம் ஹெலிகொப்ரர் வசதியை வழங்காததால், அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.பதமிழ்ச்செல்வன் மாமனிதர் சந்திரநேருவின் இறுதிக்கிரியைகளில் பங்கேற்க முடியாதநிலை ஏற்பட்டது.

திருகோவிலில் நேற்று மாலை நடைபெற்ற இறுதிக் கிரியைகளில் பங்குபற்ற அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மற்றும் கேணல் பானு ஆகியோர் ஹெலிகொப்ரர் மூலம் அங்கு செல்லத் திட்டமிட்டிருந்தனர்.

எனினும், ஹெலிக்காக இவர்கள் காத்திருந்த போதும் - அரசாங்கம் ஹெலியை அனுப்பி வைக்காததால் மாமனிதர் சந்திரநேருவின் இறுதிக் நிகழ்வில் இவர்கள் பங்கேற்க முடியாதநிலை ஏற்பட்டது.

இதேவேளை வெலிக்கந்தவில் வைத்துக் கொலை செய்யப்பட்ட மாமனிதர் அரியநாயகம் சந்திரநேருவின் இறுதிக் கிரியை நேற்று மாலை திருகோவிலில் இடம்பெற்றது.

இறுதிக் கிரியையில் அம்பாறை மாவட்ட அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் குயிலின்பன் மற்றும் இராணுவப் பொறுப்பாளர் ஜனார்த்தனன் ஆகியோர் பங்குகொண்டனர்.

# சமாதான முயற்சியில் கலக்கப்பட்ட நஞ்சு!

## கௌசல்யன் கொலை குறித்து அகாஷி கருத்து

அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் வைத்து புலிகளின் மட்டு. - அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் உட்பட்ட போராளிகள் மற்றும் அரியநாயகம் சந்திரநேரு கொல்லப்பட்ட சம்பவம் - சமாதான நடவடிக்கையில் நச்சுத் தன்மையைக் கலந்ததற்குச் சமானானது என்று ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாஷி தெரிவித்தார்.

கொக்கட்டிச்சோலையில் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவைச் சந்தித்துப் பேசிய பின்னரே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்து வெளியிடுகையில் -

இந்தக் கொலைகள் கண்டிக்கத்தக்கது. இது தொடர்பான எமது கவனத்தினை அரசாங்கத்திடம் கொண்டுசெல்லவுள்ளேன்.

சுனாமி அனர்த்தம் காரணமாக கிழக்கிலேயே அதிகமான மக்கள் உயிரிழந்துள்ளார்கள். மக்களின் பெரும் சொத்துக்கள் அழிவுற்றுள்ளன.

நிவாரணங்கள் வடக்கு- கிழக்குக்கு அனுப்பப்படுவதாக அங்குள்ளவர்கள் கூறுகின்றனர். ஆனால் வடக்கு - கிழக்கில் உள்ளவர்கள், பணம் அனைத்தும் தென்பகுதிக்குச் செல்வதாகக் கூறுகிறார்கள். எனினும், இரு தரப்பினரின் எண்ணங்களுக்கிடையில் இப்படி வித்தியாசமிருப்பது துரதிஷ்டமானது.

ஆனால் ஜப்பான், உலகவங்கி, சர்வதேச அபிவிருத்திக்கான ஜப்பானிய வங்கி போன்றன இங்குள்ள தேவைகள் என்ன என்பதைக் கவனமாக மதிப்பிடுகின்றன. இங்கு உண்மையில் என்னென்ன தேவைகள் என்பதை அவர்கள் மதிப்பிட்டு வருகின்றனர்.

இதன் அடிப்படையில் அவர்கள் கவனமாகவும், பாரபட்சம் இல்லாமலும் நிவாரண உதவிகளை வழங்கவுள்ளனர். கிழக்கின் தேவைகள் கவனிக்கப்படுமென்று நான் உறுதி கூறுகின்றேன். கவலைப்படவேண்டாம். விநியோகம் சம்பந்தமாக புலிகளுக்கும் அரசுக்கும் ஒரு இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்து வருகின்றோம் என்று அகாஷி மேலும் தெரிவித்தார்.

## நெருக்கடியான சூழ்நிலையே....

இடம்பெற்றது. தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மற்றும் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் மார்ஷல், தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியார் கலந்துகொண்ட இச்சந்திப்பு கொக்கட்டிச்சோலை சோலையகத்தில் நடைபெற்றது.

இச் சந்திப்பின் பின்னர் தமிழீழ அரசியற் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் -

தற்போதைய நிலைமைகள் தொடர்பாக எடுத்து விளக்கியுள்ளோம். குறிப்பாக சமாதான முயற்சிகளை சீர்குலைக்கின்ற நடவடிக்கை, அனர்த்த செயற்பாடுகள் தொடர்பாக அகாஷியிடம் எடுத்து விளக்கியுள்ளோம்.

குறிப்பாக கௌசல்யனின் படுகொலையானது அமைதிச் சூழலை தகர்க்கின்ற பாரிய யுத்தநிறுத்த மீறலாகவே அமைந்துள்ளது. முழுவதும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் இராணுவத்தினரின் துணையுடன்தான் இந்தப் படுகொலைகள் இடம்பெற்றுள்ளன என்பதை நாம் தெளிவாகச் சுட்டிக் காட்டியுள்ளோம்.

சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதற்குப் பதிலாக மிக நெருக்கடியான சூழலை உருவாக்குவதற்கான நிலையினை இப் படுகொலைகள் அமைந்துள்ளன என்பதனையும் விளக்கியுள்ளோம். அத்தோடு பேரழிவினை மக்கள் சந்தித்து நிற்கிறார்கள். அழிவிலிருந்து மக்கள் மீள்வதற்கு சர்வதேச உதவிகள் தேவையாக உள்ளது.

சர்வதேச உதவிகள் இலங்கை அரசு ஊடாக எமது மக்களை வந்து சேராது. சர்வதேச உதவிகள் உதவக்கூடிய வழி முறைகள் ஊடாக கொண்டுவரப்பட வேண்டும். அதற்கான வழியினை சர்வதேச சமூகம் இனங்காணவேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, பேச்சுவார்த்தையின்பின் விடுதலைப் புலிகளால் பளுகாமம் காந்தருபன் அறிவுச்சோலைக்கு அழைத்துச் செல்லப்பட்ட அகாஷி சுனாமியால் தாய், தந்தையை இழந்த சிறார்களைப் பார்வையிட்டு, அவர்களுடன் கலந்துரையாடினார். தங்களுக்கு ரி.ஆர்.ஓ நிறுவனம் பல வழிகளிலும் உதவிகள் புரிந்து வருவதாக அந்தச் சிறுவர்கள் அகஷியிடம் தெரிவித்தனர்.

அத்துடன் தூதுவரிடம் தமக்குப் பல்வேறுபட்டவழிகளில் உதவிகள் தேவைப்படுகின்றன எனவும் தெரிவித்தனர்.

அடுத்து சுனமியால் பாதிப்புற்ற முஸ்லிம் மக்களைச் சந்தித்த பின்பு அகாஷி அங்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் அதன் ஐரோப்பிய நாடுகளின் தொண்டர்களும் இணைந்து மேற்கொள்ளும் மீள் கட்டுமானப் பணிகளைப் பார்வையிட்டார்.

## அரசியற்துறைச் செயலகம்....

ஞானப்பிரகாசம் சீலன் கலிஸ்ரர் ஜோர்ஜ் (வயது22), செபஸ்தியாம்பிள்ளை வெனிஸ் போல் (வயது 23) நாகசுவாமி விஜயன் (வயது 40), ஆகிய மூவருமே படுகாயமடைந்த நிலையில் மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். மூவருக்கும் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை வழங்கப்பட்டு வந்த நிலையில் ஞானப்பிரகாசம் சீலன் கலிஸ்ரர்ஜோர்ஜ் என்ற இளைஞர் வைத்தி யசாலையில் மரணமடைந்தார்.

சம்பவ இடத்துக்கு மன்னார் மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர், மன்னார் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் விரைந்து சென்று, சம்பவம் நடைபெற்ற இடத்தைப் பார்வையிட்டதுடன் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் விசாரணை நடத்தினர். இந்தச் சம்பவத்தை அடுத்து மன்னார் அரசியற்துறைச் செயலகத்தை அண்டிய பகுதிகளில் பதற்றநிலைமை தோன்றியது. இதனால் பொலிஸார் அங்கு குவிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (மி)

## கிழக்கு படுகொலை....

வடபிராந்திய போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் பஸ் சேவைகள் எதுவும் இடம்பெறவில்லை. தனியார் கல்வி நிலையங்கள் மூடப்பட்டிருந்தன. பிரத்தியேக வகுப்புக்கள் எதுவும் நடைபெறவில்லை.

இதேவேளை, பிரதான வீதிகளின் சந்திகளில் குறுக்கே ரயர்கள் எரிக்கப்பட்டு எதிர்ப்பு நடவடிக்கையில் அந்தந்தப் பகுதி மக்கள் ஈடுபட்டிருந்தனர். இதனால், சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள்களின் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டிருந்தன.

வீதிக்குக் குறுக்கே மரங்கள், ரயர்கள் போடப்பட்டு எரிக்கப்பட்டன. வடமராட்சி கரையோரப் பகுதிகளில் சுனாமி கடற்பேரனர்த்தத்தால் சேதமடைந்த கட்டிடங்கள் வள்ளங்கள் ஆகியன வீதிக்குக் குறுக்கே போடப்பட்டிருந்தன. வீதிகள் மக்கள் நடமாட்டம் இன்றி வெறிச்சோடிக் கிடந்தன. அத்துடன் இராணுவத்தின் போக்குவரத்து நேற்று மாலை வரை தடைப்பட்டிருந்தது. எனினும் வீதிகளில் இராணுவத்தினரின் நடமாட்டம் குறைவாகவே காணப்பட்டது. பிரதான சந்திகள் பொது இடங்களில் ஹர்த்தாலை ஒட்டிய வாசகங்கள் அடங்கிய சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன.

சர்வதேசமே படுகொலைகளை நிறுத்தச் சொல் இல்லையேல் மக்கள் புரட்சி வெடிக்கும், அரசே தமிழ மக்களின் பொறுமையைச் சீண்டாதே, நெருப்புடன் விளையாடுவதை நிறுத்து, சிங்கள அரசே சமாதான காலத்தில் எமது உடன் பிறப்புக்கள் மீதான படுகொலைகளை நிறுத்து என்ற வாசகங்கள் காணப்பட்டன.

இதேவேளை, குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள வர்த்தக நிலையங்கள் பொது இடங்கள், பிரதான சந்திகள் ஆகியவற்றில் கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டும், ஒலி பெருக்கிகள் கட்டப்பட்டு சோக கீதங்கள் இசைக்கப்பட்டன. (46,14,12,48)

## படையினரின் காவலரண்கள்....

காலை 9 மணியளவில் சில பொதுமக்கள் கதைத்துக் கொண்டிருந்தபோது - காவலரணில் இருந்த படையினர் துப்பாக்கியைக் காட்டி மிரட்டி அங்கிருந்து செல்லுமாறு எச்சரித்தனர்.

இதையடுத்து அங்கு நின்ற பொதுமக்களுக்கும், படையினருக்குமிடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. வாய்த்தர்க்கம் முற்றிய நிலையில் கைகலப்பாக மாறியது.

இவ்வேளையில் படையினர் வானத்தை நோக்கித் துப்பாக்கியால் சுட்டு எச்சரித்தபோது - அப்பகுதியில் கூடிய பொதுமக்கள் படையினர் மீது கற்களை வீசித் தாக்குதல் நடத்தினர்.

இதையடுத்து அப்பகுதியில் பெருமளவு பொலிஸார் குவிக்கப்பட்டதுடன் அவர்கள் பொதுமக்கள் மீது கண்மூடித்தனமாகத் தாக்குதல் நடத்தினர்.

இதனால் ஆத்திரம்கொண்ட பொதுமக்கள், இராணுவ முகாமுக்கு முன்பாக ரயர்களைப் போட்டு எரித்ததுடன் முகாம்மீது கற்களை வீசித் தாக்கினர்.

பொதுமக்களின் தாக்குதலை அடுத்து, புத்தூர்ச்சந்தி முகாமில் நின்ற படையினரும் அப்பகுதிக்கு வந்திருந்த பொலிஸாரும் தப்பி ஓடிவிட புத்தூர்ச்சந்தி முகாமுக்கு பொதுமக்கள் தீவைத்தனர்.

சுமார் 10.30 மணியளவில் புத்தூர்ச்சந்தி முகாமுக்குத் தீவைக்கப்பட்டதை அடுத்து, பொதுமக்களின் மீது பொலிஸார் கண்ணீர்ப் புகைக் குண்டுவீச்சை நடத்தியதுடன் வானத்தைநோக்கித் துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொண்டனர்.

இந்த மோதல்கள் சுமார் 4 மணி நேரமாக அப்பகுதியில் தொடர்ந்து இடம்பெற்றன. இந்த மோதலைத் தொடர்ந்து அப்பகுதியில் பெரும் பதற்றநிலை உருவானது.

இந்தச் சம்பவத்தைக் கேள்வியுற்று பிற்பகல் 1.30 மணியளவில் அப்பகுதிக்கு வந்த இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகள் நிலைமையை ஆராய்ந்தனர். தென்மராட்சிக் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ஈஸ்வரன் கண்காணிப்புக் குழுவுடன் பேசி நிலைமையை விளங்கப்படுத்தினார்.

படையினர் மற்றும் பொலிஸாரை இப்பகுதியிலிருந்து அகற்றினால் பொதுமக்களும் கலைந்து செல்வதாகக் கூறியதை அடுத்து, கண்காணிப்புக்குழுவின் தலையீட்டினால் அவர்கள் விலகிச்சென்றனர்.

படையினரும் பொலிஸாரும் விலகிச் சென்றதை அடுத்து, பொதுமக்களும் கலைந்து சென்றனர். இந்தச் சம்பவத்தில் படையினர் மற்றும் பொலிஸாரின் தாக்குதல்களில் சிலர் காயமடைந்தனர்.

இதேவேளை கொடிகாமத்தில் போராட்டம் செய்த பொதுமக்கள் மீது பொலிஸார் நேற்றுப் பிற்பகல் தாக்குதல் நடத்தியதில் தவசிக்குளததைச் சேர்ந்த 5 பொதுமக்கள் காயமடைந்தனர்.

நேற்றைய போராட்டத்தின் போது நான்குபேரைப் பொலிஸார் கைதுசெய்தனர். அவர்களை விடுவிக்குமாறுகோரி - பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக பொதுமக்கள் போராட்டம் நடத்தினர்.

இதையடுத்து கைதான நால்வரும் அடிகாயங்களுடன் விடுவிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

இந்தச் சம்பவத்தில் பொலிஸாரின் தாக்குதலில் கொடிகாமம் தவசிக்குளத்தைச் சேர்ந்த மணியம் கரன் (வயது 20), இராசதுரை தீபன (வயது 20), கணபதிப்பிள்ளை யோகநாதன் (வயது 26), நல்லதம்பி யுவகரன் (வயது 22), யோகநாதன் தவசீலன் (வயது 18) ஆகியோரே கடுமையாகத் தாக்கப்பட்டு படுகாயமடைந்தவர்களாவர். இவர்களில் ஒருவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இதனிடையே கைதடியிலும் நேற்றுக்காலை படையினருக்கும் பொதுமக்களுக்குமிடையில் மோதல்கள் இடம்பெற்றன.

நேற்றுக்காலை 9 மணியளவில் கைதடி சந்திப் பகுதியில் வீதியை மறித்து ரயர்களைப்போட்டு எரித்த பொதுமக்களைப் படையினர் கலைத்ததையடுத்து அங்கும் முறுகல் நிலை தோன்றியது.

இதையடுத்து காலை 11 மணியளவில் கைதடிச் சந்தியில் இருந்த இராணுவக் காவலரண் பொதுமக்களால் தீயிட்டெரிக்கப்பட்டது. இதையடுத்து அங்கு பெருமளவான பொலிஸார் குவிக்கப்பட்டனர்.

இங்கு தொடர்ந்தும் பதற்ற நிலை ஏற்பட்டபோதும் பெரும் மோதல்கள் எதுவும் இடம்பெறவில்லை.

இதேவேளை, தென்மராட்சியின் பல்வேறு பகுதிகளிலும் வீதிகளுக்குக் குறுக்கே ரயர்கள் போட்டு எரிக்கப்பட்டதுடன் வீதித்தடைகள் ஏற்படுத்தப்பட்டு போக்குவரத்துத் தடைசெய்யப்பட்டிருந்தது.

இதேவேளை தென்மராட்சிப் பகுதியில் பெருமளவிலான படையினரும் கலகம் அடக்கும் பொலிஸாரும் குவிக்கப்பட்டிருந்தனர்.

இதேவேளை, நேற்றிரவு 7 மணியளவில் மிருசுவில் பகுதியில் பொலிஸாரின் தண்ணீர் பவுஸரை ஆத்திரம்கொண்ட பொதுமக்கள் தடுத்து நிறுத்தித் தாக்குதல் நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் இருந்த இரண்டு பொலிஸார் பொதுமக்களால் காடுமையாகத் தாக்கப்பட்டு காயமுற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(29, 34)

## சந்திரநேருவுக்கு....

விட்டார்.

அரியநாயகம் சந்திரநேரு அவர்கள் தன்னலமற்ற மனிதநேயம் மிக்க ஒரு பொதுநலவாதி. தமிழீழ மண் தந்த தலைசிறந்த ஒரு மனித உரிமை ஆர்வலர். புரட்சிகரமான ஒரு அரசியல்வாதி. அனைவரது உள்ளங்களையும் கவர்ந்து கொண்ட ஒரு உயரிய பண்பாளர். இவரது சாவு தமிழர் தேசத்திற்கு ஈடுசெய்யமுடியாத ஒரு பேரிழப்பு.

அம்பாறை மண்ணோடும் அந்த மண்ணின் மக்களோடும் ஒன்றியதாகவே அவரது வாழ்விருந்தது. சிங்களப் படைகளின் தமிழின அழிப்புப் போர் உச்சம் பெற்றிருந்த நாட்களிலும், போர் ஓய்வு நிலவுகின்ற இன்றைய நாட்களிலும் அந்த மண்ணோடும், மக்களோடும் இணைந்து நின்று அனைத்துக்கும் முகம் கொடுத்தார்.

சிங்களப் படைகள் அம்பாறை மண்ணில் புரிந்த அழிவுகளையும், அட்டூழியங்களையும் , நெஞ்சுறுதியுடனும், நேர்மைத் திறனுடனும் உலகிற்கு வெளிக்கொணர்ந்தார். சிங்களப் படைகளின் இடைவிடாத அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் ஆபத்துக்கள் சூழ்ந்திருந்த போதும் அஞ்சா நெஞ்சுடனும் அபாரமான துணிச்சலுடனும் அநீதியை எதிர்த்துப் போரிட்டார்.

வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தின் நிறுவுனர்களில் ஒருவராக இருந்து தமிழ் மக்களின் உரிமைகளுக்காக ஓயாது உழைத்தார். தமிழ் மக்களது போராட்ட நியாயங்களையும், நியாயப்பாடுகளையும் தெட்டத்தெளிவாக உலக அரங்குகளில் எடுத்துக் கூறினார். இவரது அரும்பணி என்றும் பாராட்டுக்குரியது.

அரியநாயகம் சந்திரநேரு அவர்களின் இனப்பற்றுக்கும், விடுதலைப் பற்றுக்கும் மதிப்பளித்து அவரது நற்பணியை கௌரவிக்கும் முகமாக 'மாமனிதர்' என்ற அதியுயர் தேசிய விருதை அவருக்கு வழங்குவதில் நான் பெருமை அடைகிறேன். என்றும் உன்னத இலட்சியத்திற்காக வாழ்ந்த உயர்ந்த மனிதர்களைச்சாவு அழித்துவிடுவதில்லை. எமது தேசத்தின் ஆன்மாவில் அவர்களுக்கு என்றும் அழியாத இடமுண்டு என அந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை -

அம்பாறை மாவட்டத்தில் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பாவட்டாவில் நேற்று இடம் பெற்ற நிகழ்வில் அ.சந்திரநேருவுக்கான மாமனிதர் விருது தொடர்பான சான்றிதழை அவரது மனைவியிடம் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டத் தளபதி ராம் கையளித்தார்.

புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள கஞ்சிக்குடிச்சாறு பகுதியில் பாவட்டா என்ற இடத்தில் மாமனிதர் சந்திரநேருவின் சடலம் அஞ்சலிக்காக வைக்கப்பட்ட நிகழ்விலேயே இந்தச் சான்றிதழ் கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் மூத்த உறுப்பினர் க.வே.பாலகுமாரன், தளபதி கேணல் ரமேஸ், கரிகாலன் ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 13.02.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.